Registered as a Newspaper in Ceylon  விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி  National Tamil Daily

மலர் 7  (7-12-65)  இதழ் 298

விசுவாவசு கார்த்திகை 22 ஷ்ஃபான் பிறை 13 செவ்வாய்க்கிழமை

## மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நீதிமன்ற விசாரணை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மின்சாரத்தடை காரணமாக நேற்றுக்காலை, மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் விசாரணைகள் நடைபெற்றன.

வானம் மப்பும் மந்தாரமுமாகஇருந்ததோடு, மழை விடாது தொடர்ந்து பெய்துகொண்டிருந்ததனல் நீதிமன்றததிற்குள் இருட்டாக இருந்தது. இதன்காரணமாகமெழுகுவர்த்தி வெளிச்சத்தில் விசாரணைகள் நடைபெற்றன.

யாழ்நகரில் மற்றும் பல வர்த்தக ஸ்தாபனங்களிலும், அரசாங்க காரியாலயங்களிலும் மெழுகுவர்த்திகள் எரிந்தன. யாழ்ப்பாணம்காணிப்பதிவகம், மாஜிஸ்திரேட் நீதிமன்றக் கந்தோர் ஆகியவற்றிலும், மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் வேலைகள்நடைபெற்றுக்கொண்டிருந்தன.

# வடமராட்சியில் 125 குடும்பங்கள் பாதிப்பு

## 143 இந்தியதுருப்புகள் கொல்லப்பட்டனர்

### பாகிஸ்தான் அறிவிப்பு

கராச்சி, டிச. 6

ராஜஸ்தான் முன்னணியிலுள்ள சாதாவாலா என்னுமிடத்திலுள்ள நிலையை மீட்டபொழுது ஏற்பட்ட சண்டையில் 143 இந்தியத் துருப்புகள் கொல்லப்பட்டனர் என்றும் 52 பேர் கைது செய்யப்பட்டனரென்றும் பாகிஸ்தான் அறிவித்ளள்ளது.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில் 7 பாகிஸ்தான் துருப்புகள் மாண்டனர் என்றும் 6 பேர் காயமடைந்தனர் என்றும் கூறினர்.

இந்தநிலையை இந்திய — பாகிஸ்தான் சண்டையின் போது இந்தியத் துருப்புகள் கைப்பற்றினர் என்றும் இப்பொழுது மீட்கப்பட்டு விட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(பி. டி. ஸி.)

## சந்திரனைக்கடந்து பறக்கும் பொருள்கள்

### வியாழனிலிருந்து வந்தன்?

புவனர்ஸ் அயர்ஸ், டிச 6

இனம் கண்டுபிடிக்க முடியாத மூன்று பறக்கும்பொருள்களை (வஸ்துக்களை) தாம் புகைப்படம் பிடித்து வைத்திருப்பதாக இங்குள்ள ரோமன்கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் அறிவித்துள்ளார். இந்தப் பறக்கும் பொருள்கள் வேறு ஒரு கிரகத்திலிருந்து வந்திருக்கலாம் என்று அவர் கருதுகிறார்.

பெனிடோ றீனு என்ற இந்த பாதிரியார் ஒருகணித பேராசிரியர் தனிப்பட்ட முறையில் ஒரு ஆராய்ச்சி நிலையம் வைத்திருக்கின்றார்.

இப்பொருள்கள் சந்திரனின் 'தரையை' கடக்கும் பொழுது தாம் படம்பிடித்ததாக இவர் மேலும்தெரிவித்துள்ளார். அநேகமாக இந்த வஸ்துக்கள் வியாழன் கிரகத்திலிருந்து வந்திருக்கலாம் என்று இவர் கருதுகின்றார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இவர் அந்தப் புகைப்படங்களின் பிரதிகளை நிருபர்களுக்குக் கொடுத்திருந்தார், இந்தப் புகைப்படங்களை தமது ஆராய்ச்சி நிலையத்திலிருந்து அவர் எடுத்திருந்தார். இப்படங்களில் மூன்று வட்டமான கரும்புள்ளிகள் வெவ்வேறு மாதிரி காட்சி கொடுத்தன. (பி.டி.ஸி)

## சிங்கப்பூரில் குடும்பக் கட்டுப்பாடு

சிங்கப்பூர், டிச 6

அடுத்தவருடம் ஜனவரியிலிருந்து சிங்கப்பூர் அரசாங்கம் ஐந்துவருட குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டமொன்றை அமுல்செய்யவிருக்கிறது.

இத்திட்டத்துக்காக 10,00,000 மலேசிய டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் ஜனத்தொகை அதிகரிப்புகுறித்து அரசாங்கம் கவலைதெரிவித்துள்ளது.

1959-ம் ஆண்டில் சிங்கப்பூரில் ஜனத்தொகை 15,80,000 ஆகும். இது கடந்த வருடத்தில் 18,20,000 ஆக அதிகரித்திருக்கிறது.

(பி.டி.ஸி)

## சிறைக் கைதி பரீட்சை எழுதினர்

கண்டி. திங்கள்

சிறைக்கைதி ஒருவர்முதல் தடவையாக இன்று ஆரம்பமான ஜி. சி. ஈ. பரீட்சை எழுதினர். 28 வயதானவரும் 10 வருட சிறைத்தண்டனை பெற்றவருமான இவர் கல்வி இலாகாவால் கைதிகளுக்காக ஒழுங்குசெய்யப்பட்ட வகுப்பில் பயின்று இப்பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி [illegible]

## யாழ்ப்பாணத்தில் கடும் மழை; பல இடங்களில் சிறுவெள்ளம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் கடுமையான மழை தொடர்ந்து பெய்வதால் யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள தாழ்வான பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. பல பாதைகளில் பஸ்போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தந்தி, டெலிபோன் தொடர்புகள் சில இடங்களில் சீர்குலைந்துவிட்டது. மழை தொடர்ந்து பெய்யுமானல் யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் பரவலாக வெள்ளம் ஏற்படலாமென அஞ்சப்படுகிறறு.

வடமராட்சிப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினல் 125 குடும்பங்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறிவிட்டனர்.

### பஸ் சேவை பாதிப்பு

கடுமையான மழைபெய்வதைத்தொடர்ந்து புன்னலை- கீரிமலை பாதையில் முதலாவது மைலில் வெள்ளம் ஒரு அடிக்கு மேலாகப் பாய்வதால் இப்பாதையில் போக்குவரத்துகள்பாதிக்கப்பட்டுள்ளன. கட்டுவன்-பலாலி வீதியில் மூன்ரும், ஆரும் மைலில் வெள்ளம் பாய்கிறது. இங்கு ஆறு அங்குல தண்ணீர் இருக்கிறது. மழை தொடர்ந்து பெய்வதால்இங்கு வெள்ளம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் புன்னலை— பருத்தித்துறை வீதியில் பல்னேழாவது, இருபத்திமூன்று, இருபத்திநான்காவது மைலில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. வீதிகளில் குழிகள் விழுந்திருப்பதால் இப்பாதைமிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுழிபுரம் பாதையில் முதலாவது, இரண்டாவது மைலில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இங்கு ஒருஅடித் தண்ணீர் பாய்கிறது.

### மரங்கள் சாய்கின்றன

பல இடங்களில் மரங்கள் வேரோடு கீழே சாய்ந்துவிட்டன. மின்சார தந்திக்கம்பங்கள் சில பகுதிகளில் விழுந்துவிட்டதால் டெலிபோன் தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

### இரணைமடுக் குளம் நீர்மட்டம்

ரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் இருபத்தி ஏழு அடிக்கு உயர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீர்மட்டம் உயருமானல் சுற்றியுள்ளபகுதிகள்பாதிக்கப்படலாம் என அறிவிக்கப்படுகிறது.

### பாதைகள் வெட்டப்பட்டன

பல பகுதிகளிலும் சிறு [illegible] தால், போக்குவரத்துப் பாதைகள் வெட்டப்பட்டு வெள்ளத்தை வேறு இடங்களுக்குத் திருப்புவதில் சமுக சேவாபகுதியினர் ஈடுபட்டுள்ளனர். இதன்விளைவாக பஸ் போக்குவரத்து சேவைகள் சில பாதைகளில் தடைப்பட்டுள்ளன.

### தேவாலயத்தில் மீனவர் தஞ்சம்

சங்கானைப்பகுதியில் பெய்த கடுமையான மழையினல் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தேவாலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இங்கு சில குடிசைகள் மழையினல் சேதமடைந்துவிட்டன.

### அவசர அழைப்பு

வடமராட்சிப் பகுதியில் வெள்ள அறிகுறிகள் காணப்படுகிறது. மழை தொடர்ந்து பெய்யுமானல் தாழ்வான பல பகுதிகள் நீரில் மூழ்கிவிடலாம் என அஞ்சப்படுகிறது. யாழ்ப்பாணம் சமூக சேவைப்பகுதி அதிகாரிக்கு இன்று கிடைக்கப்பெற்ற அவசர அழைப்பைத் தொடர்ந்து அவர் வடமராட்சி பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து நிலைமையை ஆராய்ந்தார்.

### பாதிக்கப்பட்ட பகுதிகள்

வடமராட்சி பகுதிகளில் கரவெட்டி தெற்கில் 20 குடும்பங்களும், உடுப்பிட்டியில் 75 குடும்பங்களும், நாகர்கோவிலில் 10 குடும்பங்களும், வல்வெட்டித்துறையில் 20 குடும்பங்களும் தங்களது வீடுகளை விட்டுவெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இக்குடும்பங்கள் பாடசாலைக் கட்டிடங்களிலும் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபங்களிலும் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

இம்பகுதிகளில் ஏராளமான வீடுகள் இடிந்துவிழும் தறுவாயில் காணப்படுகின்றன. பலகுடிசைகள், மண் வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

பாதிக்கப்பட்டமக்களுக்கு பலநோக்க கூட்டுறவு சங்கங்களின் மூலம் இலவச பங்கீட்டு அரிசி விநியோகிக்கப்படுகிறது. இவர்களுக்கு மேலும் நிவாரண உதவிகள் வழங்குவது குறித்து ஆலோசனை நடைபெற்றுவருகிறது வடமராட்சிப் பகுதியில் மழை தொடர்ந்து பெய்யுமானல் அதிகமான வீடுகள் இடிந்துவிழும் என்று அஞ்சப்படுகிறது.

### கோப்பாயில்

கோப்பாய், பத்தமேனியிலும் இருபாலையிலும் இரண்டு வீடுகள் சேதமடைந்திருக்கின்றது.

### பாடசாலை மீது பனை விழுந்தது

மாதகலில் அமெரிக்க கலவன் பாடசாலை மீது ஒருபனை மரம் விழுந்ததில் பாடசாலை அதிகமாக சேதமடைந்தது. இங்கு கடுமையான மழையுடன் பலத்த காற்றும் வீசுகிறது.

## இன்று

சங்கானை வெல்வில் முருகமூர்த்திகோவிலில் திருக்கார்த்திகைத் தீபத் திருவிழா இன்று நடைபெறும். பகல் விசேஷ அபிஷேகமும் பின்னர் சுவாமி வீதி வலம் விடுதலும் இடம் பெறும்.

## அரசாங்கம் கையேற்றது

பளை, திங்கள்

கடந்த சிலவருடங்களாக முகமாலைக் குடியேற்றத்திட்டத்தில் பளை கிராமநலன் அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் பளை சங்கரப்பிள்ளை-வேலுப்பிள்ளை தலைமையில் இயங்கி வந்த பாடசாலையை சென்றகிழமை வித்தியாதரிசியினர்பார்வையிட்ட பின்னர் அரசாங்கம் கையேற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

1966 ஸ்ரீகாந்தா நாட்காட்டி No. 2 வியாபார நிலையங்கள் விலாசமிட்ட விளம்பரத்துடன் அன்பளிப்புச் செய்வதற்குச் சிறந்தது. பஞ்சாங்கக் குறிப்புகளும் பிற பொது விபரங்களும் அடங்கியது. தேவைக்கு முந்துங்கள். ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, 213, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 1409

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக்[illegible]இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

கைத்தறியில் சேலைகள் நெய்யக்கூடிய அனுபவமுள்ளவர்கள், ரெடிமேட் உடுப்புகள் தைக்கக்கூடியவர்கள், சேலைகளுக்கு குஞ்சம் கட்டுதல், தபாலுறைகள் தயாரிக்கக்கூடியவர்கள், பழக விரும்புவோர்கள், 10-12-65க்கு முன்னதாக மாதர் கைத்தொழில் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், 29, பசார் லேன், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு கடித[illegible]மூலமாகவோ, நேரிலோ விண்ணப்பிக்கவும். 1460

நீர்வேலிவடக்கு இலக்குமி ஐக்கியபண்டகசாலைக்கு ஒரு மனேச்சர் தேவை. காசுப் பிணை ரூபா 1500/. ஆதனப் பிணை ரூ. 2000/- சம்பளம் ரூ. 120/- கூட்டுறவுப் பாடசாலையில் சாதாரண பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். முடிவு திகதி 20-12-65. இ. செல்லத்துரை, 'அருளகம்' நீர்வேலி வடக்கு. 1450

## தமிழில் விஞ்ஞானம்

உடுப்பிட்டி, திங்கள்

'தமிழில் விஞ்ஞானம் படிக்கும் மாணவர்களுக்குத் தமிழிலே உள்ள நூல்கள் போதாது, ஆங்கிலப் புத்தகங்களை மொழி பெயர்ப்பதுடன் விஞ்ஞானம் தெரிந்த தமிழர்கள்ஒவ்வோர் தமிழ்ப் புத்தகங்களை எழுதி வெளியிடவேண்டும். படித்துப் பட்டம்பெற்ற தமிழர்களின் இச்சேவை தமிழ்ச் சமுதாயத்தின் அத்தியாவசிய தேவை' என்று பண்டிதர் திரு. க. வீரகத்தி வாணி கலைக்கழக மாணவர் மன்றக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் செல்வன் க. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் பண்டிதர் இ. பரமகுரு. க. நவரத்தினம், க. சிவபாதம் ஆகியோரும்பேசினர்.


எனக்கு

மிகவும்

பிரியமானது



CEYLON CHOCOLATES LTD

கன்டொஸ்

உயர்ந்த ரகச் சொக்கலேற்று




ஏகவிநியோகஸ்தர்கள்:

ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்.

கொழும்பு-

RAVI-CCL


## பாணுத்தறையில் அதிசயக் கிணறு

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடிக்கண்மையில் நவிண்டில் என்னும் பகுதியில் பாணுத்துறையில் "பனட்டுத்தின்னிக் கிணறு" என்றோர் அதிசயமான கிணறு உள்ளது. மழைகாலங்களில் பள்ளமான இப் பாணுத்துறைப் பகுதியின் வெள்ளமெல்லாம் இப்பனட்டுத்தின்னிக் கிணற்றினுள்ளே சென்று வடியும். இவ்வெள்ளம் வடிவதற்கு இலகுவாக இக் கிணற்றைச் சுற்ற வரப் பெரிய துவாரங்கள் இருக்கின்றன எவ்வளவு வெள்ளத்தையும் இக் கிணறு தாங்கக்கூடியதாக இருக்கிறது.

இக் கிணற்றுக்கும் கீரிமலைக்கடலுக்கும் தொடர்பு உள்ளதாக இப்பகுதிமக்கள் கூறுகிறார்கள். ஆனல் வெள்ளம்தாங்கும் அதிசயமான இக்கிணறு இல்லாவிட்டால் பாணுத்துறை என்ற இடத்தில் வசிக்கும் மக்கள் என்றே வெள்ளத்துள் மூழ்கியிருப்பார்களாம். மழை காலங்களில் பக்கத்து ஊர்களிலிருந்து பலர் இக் கிணற்றை வந்து பார்வையிடுவார்கள். எவ்வளவு தான் வெள்ளம் வடிந்தாலும் கோடைகாலத்தில் இவ்வற்ருத கிணற்றுநீர் குடிப்பதற்கு உகந்ததாகச் சுத்தமாகவே இடுக்கும்.

## புதிய நிர்வாகிகள்

பருத்தித்துறை, திங்கள்

நாகர்கோவில் வடக்கு குருகுல சனசமூக நிலையத் பொதுக்கூட்டம் கி. மு. ச. மண்டபத்தில் திரு. அ. நல்லையா தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. சிவப்பிரகாசம், காரியதரிசி திரு. பொ. நாகமுத்து, தனாதிகாரிதிரு. ஏ. கணேசபிள்ளை. மேலும்நான்குபேர் நிர்வாக சபை உறுப்னர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## விளையாட்டுக்கழக நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

குருநகர் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் பொதுக் கூட்டம் மாநகரசபை உறுப்பினர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஜே. எவ். சிக்மரிங்கம், உப தலைவர் திரு. ஏ. ஜோசப், காரியதரிதி திரு. ஜோசப் பனியல், உப காரியதரிசி திரு. எஸ். சிறில், தனாதிகாரி திரு. அ. ஜேசுராஜா.

6 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## மந்திரிக்கு கோரிக்கை

வவனியா, திங்கள்

வவனியாவில் உள்ள கடைகளில் சாப்புச்சட்டம் அமுல் செய்வது குறித்து மந்திரி வர்த்தமானியில் அறிவிக்காததால் இங்கு நிலைமை மாருதிருக்கிறது.

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் உடனடியாகச் சாப்புச்சட்டம் வவனியாவில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமெனவும், வவனியாவில் உள்ள கடைச்சிப்பந்திகள் சாப்புச் சட்டம் அமுல் செய்யாமையால் பாதிக்கப்படுகின்றார்களெனவும் அவர்களின் கஷ்டங்களை உடனடியாக தீர்க்கவேண்டுமெனவும் மந்திரியைக் கேட்டுக்கொண்டார்.

## தொலைபேசித் தொடர்பு

வவனியா, திங்கள்

வவனியாவிலுள்ள பாவற்குளம் குடியேற்றத்திட்டத்திற்கும் உளுக்குளம் குடியேற்றத்திட்டத்திற்கும் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் வவனியாவில் இருந்து நேரடித் தொலைபேசித் தொடர்பு வைக்கும்படி வவனியா எம், பி. திரு. தா. சிவசிதம்பரம் மந்திரியைக்கேட்டுக்கொண்டதற்கிணங்க வவனியா பாவற்குளம் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்த சகல ஆயத்தங்களும் நடைபெறுவதாக அறியப்படுகின்றது.

## மாணவர் கஷ்டம்

பருத்தித்துறை, திங்கள்

நாகர்கோவில் நாகேஸ்வர வித்தியாலத்தின் பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டம் வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. ஆ. அம்பலவி தலைமையில் நடைபெற்ற போது போதிய தளபாடங்கள் இல்லாமையால் மாணவர்கள் படும் கஷ்டம் பற்றி வடபிரதேச உதவி வித்தியாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன் பாடசாலை வேலிகளை அடைத்துப் பாதுகாப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஆ. அம்பலவி, காரியதரிசி திரு. க. சிவப்பிரகாசம், உபதலைவர் திரு. சி. இராசையா, காரியதரிசி திரு. ஏ. கணேசபிள்ளை, தனாதிகாரி திரு. க, ஆறுமுகம், உப தனாதிகாரி திரு. பொ. நாகமுத்து.


இதோ,

ஆராய்ச்சியின் ஓர் புதிய வெற்றி

"பியூர் கெமிக்கல் புரொடக்ஸ்" ஸின்

தயாரிப்பாகிய

"ரொனிக்கோ"

என்னும் கோப்பித்தூள்.

இத்தகைய குணங்கள் வாய்ந்த கோப்பித்தூள் வேறெதுவும் இன்று கிடையா.

எவ்வயசினருக்கும் ஆரோக்கியத்தையும், ருசியையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது.

இதில் கபேயின் (CAFFEINE) சத்து, மலச்சிக்கல், பித்தக் கிறுகிறுப்பு அறவே கிடைக்காது.

அன்றியும் விபரீதமான செயற்கை வஸ்துக்கள், வாசனைகள் எதுவும் சேர்க்கப்படாதது. மிகவும் சுத்தமானதும், ஆரோக்கியமானதும். பால் சேர்த்துச் சாப்பிட மிகவும் குணமானது.

எதிர்பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டில் கடுமையான மழை

## ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின

சென்னை, டிச. 6

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கடுமையான மழை தொடர்ந்து பெய்வதால் நாட்டின் பல இடங்களிலும் வெள்ளம் ஏற்பட்டிருப்பதுடன் நூற்றுக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**தஞ்சையில்**

தஞ்சாவூரில் கடுமையான மழை பெய்துகொண்டிருக்கிறது. பல இடங்களில் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. தந்திப் போக்குவரத்துகள் சிலபகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு நான்கு அங்குலம் தொடக்கம் பத்து அங்குலம் வரைக்கானமழை பெய்திருக்கிறது. ஆயிரக் கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் நீரில் மூழ்கி விட்டன.

மற்றுமொரு இடத்தில் ஒரு ஏரியில் உடைப்பு ஏற்பட்டதைத்தொடர்ந்து ஐம்பது வீடுகள் சேமடைந்தன. பாதிக்கப்பட்ட மக்கள் பத்திரமான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். பொருள் சேதமேற்பட்ட போதிலும் எவரது உயிருக்கும் சேதமேற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. குளங்கள் பல நிரம்பி விட்டன.

**சென்னையில்**

சென்னையில் கடுமையான மழை விடாது பெய்து கொண்டிருக்கிறது. சென்னையைச்சுற்றியுள்ளபலதாழ்வான பகுதிகள் வெள்ளத்தில்மூழ்கிவிட்டன. பல வீடுகள் சேதமடைந்திருக்கின்றன.

சிதம்பரத்தில்ஆறுஅங்குல மழை பெய்திருக்கின்றது. மழை தொடர்ந்து பெய்தால் போக்குவரத்து பாதிக்கப்படலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

**கேரளத்தில்**

கேரளத்தில் மழைபெய்து கொண்டிருக்கிறது. ஆனல் இங்குபெய்யும் மழையினுல் தமிழ்நாட்டின் தெற்குப்பகுதியில் உள்ள நெற்பயிருக்கு அதிர்ஷ்டம் ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

தமிழ் நாட்டில் தொடர்ந்து மழைபெய்யும் அறிகுறிகள் காணப்படுவதாக வானிலை அவதானநிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

## பழைய உடைக்கு மீண்டும் மவுசு.

ஹாம்பர்க், டிச. 6

வாளிப்பான உடல் வனப்பை 'பளிச்'சென்று எடுத்துக்காட்டும் பழங்கால 'பாஷன்' உடைக்கு மீண்டும் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

நீண்டகாலமாகஆல்பைன் மலைப்பகுதிகளில் கிராம மக்கள் வழக்கமாக அணிந்து வருகிற உடை, மூன்று பகுதிகளைக்கொண்டது. உடல் வனப்பைக் காட்டும் கச்சம்; பாவாடை; முன்புற அங்கி! இப்போது இவ்விதஉடைகள் தென்ஜெர்மனியில் மட்டுமன்றி வட ஜெர்மனியிலும் பிரபலமாகிவிட்டன. ''பெரிய இடத்துப் பெண்கள்'' இவ்வித உடைகளை விரும்பி அணிவதால் இத்துணிக்குகிராக்கி அதிகரித்து வருகிறது. தென்ஜெர்மனியில் பெண்கள் சதுரக் கழுத்து கச்சை அணிகிறார்கள். வட ஜெர்மனிப் பெண்கள், வட்டக் கழுத்துக் கச்சை அணிகிறார்கள். கண்களைப் பறிக்கும் பலவித வர்ணங்களில் இந்த ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. எனவே இவ்விதஆடைகள் அணிந்த ஆரணங்குகளைக்கண்டுவெளிநாட்டுப் பயணிகள் மெய்மறப்பதில் ஆச்சரியமில்லை. தாயகம் திரும்புமுன் இவ்வித ஆடைகளை வாங்காமல் செல்வதுமில்லை.

# விண்வெளிச் சுற்றின்போது அதிசயமான பொருள்கள்

## 'ஜெமினி-7' கப்பலின் ஜன்னல் வழியாகக் கண்டதாக அறிவிப்பு

ஹவுஸ்டன், டிசம்பர் 6

தற்பொழுது 'ஜெமினி-7' என்ற வான்வெளிக் கப்பலில் பூமியை வலம்வந்துகொண்டிருக்கும் இரு அமெரிக்க விண்வெளி வீரர்களையும், 'ஜெமினி-6' என்ற மற்றோர் வானவெளிக் கப்பலில் பிரயாணம் செய்யவிருக்கும் இரு விண்வெளி வீரர்கள் சந்திக்கும் திட்டம் அநேகமாக இம்மாதம் 15ந் தேதிக்குள் பூர்த்தியாகலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

'ஜெமினி-7' வானவெளிக் கப்பலில் பிரயாணம்செய்யும் இரு விண்வெளி வீரார்களான பிருங் போர்மனும், ஜேம்ஸ் லொவலும் விண்வெளியில் ஒருநாளை அமைதியுடன் கழித்துவிட்டு இரண்டாவது நாளில் சஞ்சரிக்கத் தொடங்கியுள்ளனர். இவர்களின் தேக நிலைமை குறித்து பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலைய டாக்டர்கள் வெளியிட்ட அறிக்கையில் தேகாரோக்கியத்துடன் இருப்பதாகவும் அவர்களின் உடல்நிலையில் எந்தவிதமான மாறுதல்களும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

விண்வெளி வீரர்கள் தங்களின் பிரயாணத்தின்போது பல அதிசயமான பொருள்களைக் கண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வானவெளிக் கப்பல்களின் சிதைந்த பகுதிகளையும்மற்றும் இனம் கண்டுபிடிக்கமுடியாத சிறிய பொருள்களையும் அவர்கள் கண்டனர். 'ஜெமினி-7' வானவெளிக் கப்பலின் ஜன்னல் வழியாக இவற்றை அவர்கள் அவதானித்தனர்.

ஒருகட்டத்தில் வானவெளிக்கப்பல் மாதிரியான ஓர் உருவம் தங்களுக்குச் சமீபமாகப் பறந்துசென்றதாக அவர்கள் அறிவித்தனர். ஆனல் இவர்களின் பிரயாணத்தின்போது வேறெந்த நாடும் வான வெளிக்கப்பல்களை அனுப்பவில்லையென்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## இராணுவ வீரரின் 'காதல் மாருட்டம்'

ஹெர்ன், டிச. 6

காதல் பெரிதா? கடமை பெரிதா? இரண்டிற்குமிடையே சிக்கித் தவித்த ஒரு இராணுவவீரர் செய்த ''காதல் மாருட்டம்'' பற்றி சுவையான தகவல்கள் கிடைத்துள்ளன.

ஹைன்ரிச்ஷீமான், 20வயதுள்ளகாளை படாதபாடுபட்டு கடைசியில் ஒரு கன்னியின் உள்ளத்தில் இடம் பிடித்தார். ஆனல்இளைஞன் கட்டாய இராணுவ சேவைக்கு அழைக்கப்பட்டார். காதலியைவிட்டுப் பிரிவதா? வேதனையால் இதயம் வெடித்துவிடும்போலிருந்தது. ஷீமான் தனது 18 வயது தம்பி ஹாரியுடன் கலந்து பேசினுன்.

ஷீமான் என்ற பெயரில் தம்பி ஹாரி இராணுவத்தில் போய்ச்சேர்ந்தான். மூன்றே நாட்களில் காதலைவிட கடமையே பெரிதெனஉணர்ந்த ஷீமான், இராணுவ முகாமுக்கு டெலிபோன் செய்து உண்மையைக் கக்கிவிட்டான்.

முடிவுஎன்ன? ஷீமான் மட்டுமன்றி ஹாரியும் தொடர்ந்து இராணுவத்தில் பணிபுரிந்து வருகிறுன்.

## தீப்பெட்டி அளவில் டெலிவிஷன் பெட்டி

கோலோன், டிச. 6

உலகிலேயே மிகச்சிறிய டெலிவிஷன் பெட்டி தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தீப்பெட்டியின் அளவே இது இருக்கிறது.

கோலோன் நகரிலுள்ள பெரிய பலசரக்குக்கடைக்காக, மேற்கு ஜெர்மன் நிபுணர்கள் தயாரித்துள்ள இந்த குட்டி டெலிவிஷன் பெட்டி, சமீபத்தில் ஸ்டட்கார்ட் நகரில் நடந்த டெலிவிஷன் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது. பின்னர் இக் குட்டி டெலிவிஷன் பெட்டி, பலசரக்குகடையில் ஒரு பொம்மைகள் அறையில் வைக்கப்பட்டிருக்கிறது இந்தக் குட்டி டெலிவிஷன் திரையில் படங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

## சந்திரனை இன்று முட்டும்

மாஸ்கோ. டிச. 6

சந்திரனுக்கு சோவியத் யூனியன் அனுப்பிவைத்த ''லூனு-8'' என்ற செய்மதி நாளை அதிகாலை சந்திரமண்டலத்தில் இறங்கும் என்று சோவியத் செய்திஸ்தாபனமான டாஸ்'' அறிவித்துள்ளது.

## செய்திக்கு மறுப்பு

புதுடில்லி. டிச. 6

மைசூர்ராஜ்யத்தில் வகுப்புக்கலவரம் தலைதூக்கியிருப்பதாக பாகிஸ்தான் வெளியிட்ட செய்தியை மைசூர் அரசாங்கம் மறுத்துள்ளது.

## சந்திப்பு

ராவல்பிண்டி, டிச. 6

கராச்சி வந்துசேர்ந்த அமெரிக்க பார்லிமெண்ட் கோஷ்டியினர்இன்று பாகிஸ்தான் அதிபர் அயூப்கானை சந்திப்பார்கள்.

## கென்னடி ஞாபகார்த்த திரைப்படம்

பம்பலப்பிட்டி. திங்கள்

முன்னுள் அமெரிக்க ஜனதிபதி கென்னடியின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் திரைப்படம் விரைவில் நாட்டில் உள்ள பல சினிமா தியேட்டர்களில் காண்பிக்கப்படும். இம்மாதம் 10-ம் 12-ம் திகதிகளில் கண்டியில் இப்படம் காண்பிக்கப்படும். அடுத்தவருடம் பெப்ரவரி மாதம்வரை நாட்டில் பல பகுதிகளிலும் இந்தப்படம் காண்பிக்கப்படும்.

# மிளகு சாப்பிட்டால் நிதான புத்தி வளருமா?

## விஞ்ஞானிகள் ஆராய்கின்றனர்

ஹாம்பர்க், டிச. 6

உணவு ருசியாக இருப்பதற்காக 'மசாலா' நிறையப் பயன்படுத்துகிறோம். இது உடலுக்கு நல்லதா என்ற கேள்வி பிறந்திருக்கிறது. மசாலாவைச் சேர்த்துச் சாப்பிடும்போது, உமிழ்நீர் அதிகம் சுரந்து, உணவு எளிதில் ஜீரணம் ஆகிறது. எனவே இருதய, இரத்த ஓட்டம் தொடர்பான வியாதிகளைக் குணப்படுத்த வாசனைத் திரவியங்களை எந்த அளவுக்குப் பயன் படுத்தலாம் என்பதை மேற்குஜெர்மனிமருத்துவர்கள்சோதனை செய்து வருகிறார்கள்.

உணவு சுவையாக இருந்தால் நாக்கைச் ''சப்புக் கொட்டிக் கொண்டு'' சாப்பிடுகிறோம். உணவு பதார்த்தங்களில், மிளகு, பட்டை, கிராம்பு போன்றவை சேர்க்கும்போது, அருமையான வாசனை மூக்கைத் துளைக்கிறது.

வாசனைத்திரவியங்களை எந்த அளவுக்குப்பயன் படுத்தலாம்? இவற்றினுல் நன்மையா? கெடுதலா? உண்மையில் மிளகில் மருத்துவ பயன் என்ன என்பது குறித்து மருத்துவர்களுக்குதெரியாது. சில வியாதிகளைக் குணப்படுத்தும்போது, மிளகைப்பயன் படுத்துவதை டாக்டர்கள் அனுமதிக்கிறார்கள்; சிலசமயங்களில் அனுமதி மறுக்கிறார்கள். அந்தக் காலத்தில் பல டாக்டர்கள் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் போது, பலவித வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தக் கூறிவந்திருக்கின்றனர். வெண்காயம், முள்ளங்கி, மஞ்சள் போன்றவை, கிருமிகளை அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்தவை என்று அனைவரும் அறிந்திருந்தனர். வசானைத் திரவியங்களினுல் உடலுக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகள் குறித்து மேற்கு ஜெர்மனியில் உணவுச்சத்து நிபுணர் பேராசிரியர் கிளாட்சல் ஆராய்ச்சியிகள் நடத்தி வருகிறார்.

வாசனைத் திரவியங்களுக்கும், உமிழ்நீர் சுரப்பதற்கும் என்ன தொடர்பு? அரிசியை அடிப்படை உணவாகக்கொண்டு, ஒவ்வொருவித வாசனைத் திரவியமாகச் சேர்த்துக்கொண்டுசோதனை நடத்தினர். மசாலா சேர்க்கப்பட்ட அரிசி உணவைச் சாப்பிட்ட பின்னர், உமிழ்நீர் அதிகம் சுரந்தது கண்டுபிடிக்கப்பட்டது, இதனுல் வாய் சுத்தமாவதுடன்; பற்களின் இடுக்குகளில் சிக்கிக் கொண்டிருக்கும் ஆகாரத் துண்டுகள் அகற்றப்பட்டு, பல்சொத்தை நோய் வருவது தவிர்க்கப்படுகிறது. உமிழ்நீர் அதிகம் சுரப்பதால், உணவு சீக்கிரமாக ஜீரணமாகிறது. உமிழ்நீரில் பலவித அமிலங்கள் கலந்து இருப்பதால், பலநோய்கள் வராமல் பாதுகாப்பு அளிக்கிறது என்பதை அவர் கண்டார்.

இருதய நோய், இரத்த ஓட்டம் சம்பந்தமான நோய் இவற்றைக் குணப்படுத்துவதில், வாசனைத் திரவியங்களை எந்த அளவுக்குப் பயன் படுத்தலாம் என்பது குறித்து கிளாட்சல் அடுத்து ஆராய்ச்சி நடத்தினர். இரத்த ஓட்ட வேகத்தை வாசனைத்திரவியங்கள் அதிகரிக்கச் செய்கின்றனவா என்பதற்கு விடைகாண அவர் முயன்றார்.

மிளகு சாப்பிட்டால், கட்டை விரலில் இரத்த ஓட்டவேகம் அதிகரிக்கிறது; ஆனல் அதே சமயத்தில் நெற்றியில் இரத்த ஓட்டம் குறைகிறது. அப்படியானல் மிளகைப்பயன் படுத்தினுல், எதற்கும் உணர்ச்சி வசப்படாத ''நிதானபுத்தி'' ஏற்படுமா? அல்லது ''மந்த புத்தி'' ஏற்படுமா? என்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

சதிவழக்கு

# விடுதலை பெற்றவர்களுக்கு மீண்டும் வேலை

பம்பலப்பிட்டி, திங்கள்

புரட்சிச்சதி வழக்கில் எதிரிகளாக இருந்து, இலங்கை சுப்ரீம்கோர்டினுல் விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு அவர்கள் முன்னர் வகித்த பதவிகள் கொடுக்கப்படும்.

சதிவழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சுப்ரீம்கோர்ட்டினுல் 12 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களுக்கு திரும்பவும் அவர்கள் முன்னர் பார்த்த உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டுமா என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சு ஒரு விசேட கமிட்டியை நியமித்திருந்தது. அக்கமிட்டி, விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலைகொடுக்கலாம் என சிபார்சு செய்துள்ளது.

விடுதலைசெய்யப்பட்ட பன்னிருவர்களில் இருவர் மேஜர்குணசேகராவும், காப்டன் எக்ஸ். ஆர். பீலிக்ஸும் முழுநேர அரசாங்க உத்தியோகத்தர் அல்லாதவர்கள், மற்றும் இருவரான ருெட்னி டி. மெல்லும், எஸ். ஜி. ஜாக்சனும் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் இப்பொழுது கடமையாற்றுகிறார்கள். உத்தியோகங்களைத் திரும்பப் பெறவிருக்கும் மிகுதிஎண்மரும் வருமாறு:- டப்ளியு. ஜெபநேசன் (பொலிஸ்சுப்பிறிண்டன்ற்), டேவிற்தம்பையா(பொலிஸ் சுப்பிறிண்டன்ற்), எல். டி. யோசெப், காப்டன் அங்கி, மேஜர் லோயலா, டி. வீரசிங்கா, லெப்டினன்ட் ஜெயக்கொடி, ஜி. வைட்.

பிரிவிகவுன்ஸிலால் விடுதலைசெய்யப்பட்டபதினெரு பேர்களையும் திரும்பவேலைக்கமர்த்துவதா என்பது பற்றியும் இவ்விசேட கமிட்டி ஆராயும் என நம்பப்படுகிறது. இவர்களை விடுதலை செய்ததற்கான காரணம் கிடைத்தபின்னரே கமிட்டி தனது வேலையை ஆரம்பிக்கும்.

## மீசாலைக்கு மின்சார வசதி

மீசாலை, திங்கள்

மீசாலையில் மின்சாரவசதிகளை ஏற்படுத்துவதுகுறித்து சுன்னுகம் மின்சாரப் பகுதியைச் சேர்ந்த திரு. எஸ். தியாகராசா சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திரு. சு. கனகரத்தினம், திரு. தர்மலிங்கம் ஆகியோருடன் நேரடியாக அவ்விடத்தைப் பார்வையிட்டுச்சென்றார்.

மீசாலை புகையிரத நிலையத்துக்கருகாமையில் உப மின்சார நிலையமும், கச்சாய் வீதி, பங்களாவீதி, டச்சு ருேட், கண்டிவீதி ஆகிய இடங்களில் ஜனவரி மாதம் தொடக்கம் மின்சாரம்பாவனைக்கு வருமென நம்பப்படுகிறது. திரு. கனகரத்தினம் திரு. தருமலிங்கம் ஆகியோர் இதற்குத் தேவையான சகல வசதிகளையும் செய்துதருவதாக தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'நான் தமிழன்; எனது மொழி தமிழ்; தமிழ்நாடு எனது கோயில்; நான் கொள்வது தமிழ் உணவு; நான் உயிர்ப்பது தமிழ் மூச்சு; தமிழர்கள் என் சுற்றத்தார். நான் எங்கே சென்று வாழ நேர்ந்தாலும், என் தமிழையும், தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் ஒரு நாளும் மறவேன்.'

—ஓர் அறிஞர்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

[illegible] விசுவாவசு ஆண்டு கார்த்திகை மீ 22 உ (7-12-65)

## பத்திரிகைச் சபை

பத்திரிகைச்சபையொன்றை இங்கு அமைக்கவேண்டுமென்ற ராஜாங்க மந்திரியின் யோசனையை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது, இது வரவேற்கத்தக்க, பாராட்டக்கூடிய நல்ல முயற்சி.

பிரிட்டனிலுள்ள பத்திரிகைச் சபையைப் போன்று இங்கும் அமைக்க வேண்டுமென்றும் இதற்கான ஆலோசனைகளை இம்மாதம் 9-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரிட்டிஷ் பத்திரிகைச்சபைத் தலைவர் டெவ்லின் பிரபுவிடம் பெறுவதற்கும் ராஜாங்கமந்திரி ஜே.ஆர் ஜயவர்த்தன உத்தேசித்திருக்கிறாராம்.

பத்திரிகைச்சபை பிரிட்டனில் மட்டுமல்ல இந்தியா மற்றும் ஜனநாயக நாடுகளிலும் இயங்குகின்றது. பிலிப்பைன்ஸிலும் பத்திரிகைச்சபை அமைக்கப்பட்டுள்ளது. ஜனநாயகம் சிறப்புறவிளங்குவதற்கு பத்திரிகைகளின் பணி அதிகம். இங்கு பத்திரிகைச் சுதந்திரம் உண்டு. பத்திரிகை ஏகபோகம் காரணமாக இந்தச் சுதந்திரத்தை தவறான முறையில் பயன்படுத்துவதாகப் புகார் கூறப்படுவதும் உண்டு. இதில் உண்மையுமில்லாமலில்லை. பத்திரிகை ஏகபோகத்தை முறியடிக்கும் நோக்கத்துடன் முன்னைய அரசாங்கம் பத்திரிகைச்சட்டம்கொண்டுவர முயற்சிசெய்தது. அந்தச் சட்டம் பத்திரிகைச் சுதந்திரத்தையே பறிக்கக்கூடியதாக இருந்ததால் அதற்குப் பலத்த எதிர்ப்புத் தோன்றி அரசாங்கத்தையே வீழ்ச்சி பெறச் செய்துவிட்டது. இங்கு பத்திரிகைச் சுதந்திரம் சில சமயங்களில் சிலரால் தவறாகப் பயன்படுத்தப்படுகிறதென்பது உண்மையே. சட்டமாக இல்லாவிட்டாலும் பத்திரிகைதர்மம் என ஒன்று உண்டு. போதிய பயிற்சியில்லாததாலும் பத்திரிகைகள் தமக்கென தாமே ஒரு நெறிமுறைக் கோட்பாடுகளை உருவாக்காதுள்ளதாலும் இங்கு பத்திரிகைகா தர்மம் சில சமயங்களில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதேசமயம் பிறநாடுகளில் பத்திரிகைகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் கொடுக்கப்படும் மதிப்பு இங்கு கொடுக்கப்படுதும் குறைவு. ஒரு சில பத்திரிகைகளுக்குமட்டும் இங்கு அதிக வாய்ப்பும் வசதியுமிருப்பதால் இதர பத்திரிகைகள் வளர்ச்சி பெறுவது கஷ்டம்.

பத்திரிகை மக்களின் குரலை ஒலிப்பது. அதன் சக்தி மிகப் பெரியது. நாட்டின் வளர்ச்சிக்கும், ஜனநாயகம் நிலைபெறவும், தேசியஐக்கியத்தை உருவாக்கவும் அரசியல் வாதிகளைவிட பத்திரிகைகளின் பணியும் சக்தியும் அதிகம். துரதிர்ஷ்டவசமாக இங்கு பத்திரிகைகளுக்கென ஒரு நெறிமுறைக் கோட்பாடு இல்லாததாலும், எதையும் எழுதலாம் எப்படியும் எழுதலாம் என்ற மனப்பான்மையுடைய, பயிற்சியும் அனுபவமுமில்லாத சிலர் பேனா பிடிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளதாலும் நாட்டில் வேற்றுமையும், பிளவும், வகுப்புத் துவேஷமும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலை மாறவும் பத்திரிகைகள் தேசியஒற்றுமையைப் பாதுகாக்கவும் ஜனநாயகத்தைப் பேணவும் பத்திரிகைகளுக்கென நெறிமுறைக் கோட்பாடு ஒன்று அவசியம். இன்று ஜனநாயக அரசாங்கம் ஆட்சிபீடத்திலிருப்பினும் இங்குள்ள சகல பத்திரிகைகளுக்கும் அரசாங்கம் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பதாக இல்லை. ஜனநாயக நாடுகள் பலவற்றில் அந்நாட்டுப் பிரதமர்கள் வாராவாரம் பத்திரிகையாளர்களின் மகாநாட்டைக் கூட்டி நாட்டின் நிலைமை பற்றியும் பத்திரிகைகள் அளிக்கவேண்டிய ஒத்துழைப்பு பற்றியும் ஆலோசனை செய்கிறார்கள். இங்கு பத்திரிகையாளர்கள் மகாநாடு கூட்டப்படுவது அபூர்வம். முன்னைய பிரதமர்பத்திரிகைகளைக் காண அஞ்சினார். இன்றைய பிரதமர் பத்திரிகையாளர்களைச் சந்திக்க வேண்டிய அவசியமில்லையெனக் கருதுகிறார் போலும். நாட்டின் முன்னேற்றத்திட்டங்களை பத்திரிகையாளர் சென்று பார்வையிடவும் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் மந்திரிகள் ஆகியோருக்குப் பிரயாணச் சலுகை டெலிபோன் தொடர்புகளில் முதன்மையளிக்கப்படுவது போன்று பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கு வசதிகள் பத்திரிகையாளர்களுக்குக் கிடையாது. ஜனநாயக நாடுகள் பலவற்றில் பத்திரிகையாளர் பயிற்சிநிலையங்களும், பத்திரிகை ஸ்தாபனங்களுக்குள் பத்திரிகையாளர்களைப் பரிவர்த்தனைசெய்து பயிற்சியளிக்கும் முறைகளும், சர்வகலாசாலைகளில்பத்திரிகைத்துறைப் பிரிவுகளும்இருக்கின்றன.

இங்கும் இந்தவசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தவும் பத்திரிகைச் சுதந்திரம் சரியான முறையில் பயன்படுத்தவும் பத்திரிகையாளர்களினதும் ஊழியர்களினதும் நலன்களைக் கவனிக்கவும் பத்திரிகைகளுக்கென நெறிமுறைக் கோட்பாடு ஒன்றை உருவாக்கவும் உத்தேச பத்திரிகைச் சபை வழிவகை காணவேண்டும். பிரிட்டிஷ் பத்திரிகைச்சபைத்தலைவரின் ஆலோசனை மட்டுமல்ல இந்தியாவின் பத்திரிகைச் சட்டமும், இந்திய பத்திரிகைச் சபை அமைப்பும் உதவிபுரியலாம்.

# பத்திரிகைக்கவுன்ஸில் விரைவில் நிறுவப்படும்

பம்பலப்பிட்டி, திங்.

பத்திரிகைக் கவுன்ஸில் ஒன்று மிகவிரைவில் அமைக்கப்படுமென்றும் நம்பப்படுகிறது. பத்திரிகை கவுன்ஸில் ஒன்று நிறுவப்படவேண்டும் என்பதை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுள்ளது.

பத்திரிகைக் கவுன்ஸில் ஒன்று நிறுவுவது சம்பந்தமாக மந்திரிசபையில்சமர்ப்பிக்கவென ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவிபரங்களைத் தயாரித்து வருகிறார். இம்மாதம் ஒன்பதாந்திகதி பிரிட்டிஷ் யூறிஸ்ட் டேவிலின் பிரபுவுடன் இதுகுறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்துவார். பிரதம மந்திரி ராஜாங்க அமைச்சு உயர்தர அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் ஆகியோர்திரு. ஜயவர்த்தனவுடன் சேர்ந்து டேவிலின் பிரபுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். பத்திரிகை கவுன்ஸிலில் எவ்விதம் அமைக்கப்படவேண்டும், அது எவ்விதம் இயங்கவேண்டும் என்பதுபற்றியும்அவர்கள் டேவிலின் பிரபுவிடமிருந்து ஆலோசனை பெறுவார்கள். டேவிலின்பிரபுபிரிட்டிஷ்பத்திரிகைக்கவுன்ஸிலின் தலைவராவார்.

தேசியஅரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் பத்திரிகைகள் சம்பந்தப்பட்ட பொறுப்பு நீதியமைச்சிடமிருந்து ராஜாங்க அமைச்சுக்கு மாற்றப்பட்டது. இலங்கையில் அமைக்கப்படும் பத்திரிகைக் கவுன்ஸில் அநேகமாக பிரிட்டிஷ் பத்திரிகைக்கவுன்ஸிலைப்போலவே அமையும் என நம்பப்படுகிறது.

## 'பற்றுக்குறையைத் தீர்க்கவே தற்காலிக இடமாற்றத்திட்டம்'

### தமிழாசிரியர் கூட்டத்தில் கோப்பாய் எம். பி.

யாழ்ப்பாணம். செவ்.

"இடமாற்றக்கட்டளைகள் வந்ததும் ஆசிரியர்கள் எமது வீடுகளுக்குப் படையெடுத்துவருகிறார்கள் இந்த மாற்றம் சிலருக்கு சந்தோஷத்தையும், சிலருக்கு துக்கத்தையும் தரலாம். நீண்டகால க்கொள்கைக்குமாறாகவும் இருக்கலாம். எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும்பணி ஆசிரிய சமூகத்தை சேர்ந்தது. மனிதனின் ஆத்மீக வாழ்வுதான் அடிப்படைத் தத்துவம் ஆத்மீக வாழ்வு மலர கடமையுணர்ச்சிவேண்டும். மனித சமூகத்தில் ஒரு மாணவனின் உரிமையையோ. கடமையையோ, உணர்த்தும்பெரும் பணி ஆசிரியர் மீது சுமத்தப்பட்டுள்ள தூய்மையான பணியாகும்"

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றவலிகிழக்குத் தமிழாசிரியர் சங்க விசேஷ பொதுக்கூட்டத்தில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு கதிரவேலுப்பிள்ளைமேலும்கூறியதாவது, தூய்மையான பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியனை மணிக்கூடு ஒடுவதுபோல அடிக்கடி மாற்றிவிடக்கூடாது. இப்படியான மாற்றங்கள் பாரம்பரியமாகவளர்ந்துவரப்பட்ட நல்ல கல்வியைப் பாதித்துவிடும் ஆசிரியர்கள் அரசினர் ஊழியர்களாக மாறிக்கொண்டு இருந்தபோதிலும், தம்மை அரசினர் ஊழியர் என்று எண்ணக்கூடாது. ஆசிரியர்கள் தம்முள் ஒற்றுமைகண்டு தம்பிரச்னையைத் தாமே தீர்க்கமுயலவேண்டும். ஆசிரியர்களை அடிக்கடி மாற்றுவதனால் தனது ஆசிரியர் பெயரேதெரியாமல் மாணவன் திண்டாடுகிறான்.

தற்காலிகமாக நடைபெறும் இந்த இடமாற்றத்திட்டம் வெளியில் உள்ள பற்றுக்குறையை நிவர்த்திசெய்ய உருவாக்கப்பட்டதேயல்லாமல் உண்மையான தொரு இடமாற்றமல்ல. இதில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டினால் அவைபற்றி ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கையெடுக்குமாறு தலைமைப்பீடத்திற்கு வற்புறுத்துவேன்.

திரு. க. இ. குமாரசாமி தலைமையுரையில் பேசும்போது, வடப்பகுதியிலுள்ள ஆசிரியர்கள் [illegible]மாக வெளியிடங்களுக்கு மாற்றப் படுகிறார்களென்றும், இதுதடுக்கப்படவேண்டுமென்றும் கூறினார்,

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் திரு. சபாலிங்கம் வட இலங்கை தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை அகில இலங்கை தமிழாசிரியர் சங்க தலைவர் திரு. இ. கந்தையா ஆகியோரும் பேசினார்கள்.

## வெளிநாடு செல்லும் விளையாட்டு ஆசிரியர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண விளையாட்டு அரங்குகளிற் சிறந்த வீரராகத் திகழ்ந்த திரு. வி. டி. ஜெயரத்தினசிங்கம் இம்மாதம் இலங்கையைவிட்டுப் பிறநாடு செல்லவிருக்கிறார். இவர் புறுணயில் ஆசிரியராகக் கடமையாற்றுவார்.

யாழ். மத்திய கல்லூரியில் 1951-ம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் அதே கல்லூரியில் மாணவராகவிருந்த காலத்தில் உதை பந்தாட்டம், கிரிக்கெட், உயரம் பாய்தல் ஆகிய விளையாட்டுகளுக்குத் தலைமை தாங்கிப் பல வெற்றிகளுக்குக் காரணமாயிருந்தார். அத்துடன் மாணவ தலைவர்களின் தலைவனாகவும் பொறுப்பேற்றுப் பணிபுரிந்தார். ஒரே ஆண்டில் சகல விளையாட்டுகளுக்கும் தலைமை தாங்கி மாணவர்க்குரிய விசேஷ பரிசையும் பெற்றுக் கொண்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1949-ம் 1951-ம் ஆண்டுகளில் வடமாகாண மாபெரும்'கிரிக்கெட்'போட்டியில் பரி. யோவான் கல்லூரியை யாழ். மத்திய கல்லூரி தோற்கடித்த உணர்ச்சிகரமான ஆட்டங்களில் இவர் தலைமை தாங்கியதை யாவரும் அறிவர். மாணவனாக இருக்கும் பொழுதே அகில யாழ்ப்பாண உதைபந்தாட்ட வீரனாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1956 ம் 1957-ம் ஆண்டுகளில் மாகாண உதைபந்தாட்டக் குழுவிற்குத் தலைமை தாங்கினார். ஓட்டங்களிலும் பாய்ச்சல்களிலும் அரிய சாதனைகளை நிலைநாட்டிய இவர் தடை தாண்டிப்பாயும் ஓட்டத்தில் அகில இலங்கைப் புகழைப் பெற்றுக் கொண்டார். மகாரகமை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில், அவருடைய பயிற்சிக் காலகங்ளில் சகல விளையாட்டுக் குழுக்களுக்கும் இவரே தலைவராய்த் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

1961-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட யசழ். 'அமெச்சூர்' விளையாட்டுக்கழகத்தின் அச்சாணியாக அமைந்தார். இவர் அதன் செயலாளராகமூன்று வருடங்கள் கடமையாற்றினார்.

## நாடும் நடப்பும்

காலநிலை அவதானநிலையம் நம்மைப் பயமுறுத்துகிறது. சோதிடர்களும் பயமுறுத்துகிறார்கள்.

'புயல்வருகிறது' என்று காலநிலை அவதானநிலையம் அடிக்கடி எச்சரிக்கைவிடுகிறது. சென்ற வருடம் புயல்வீசியபின், கொழும்பிலுள்ள அவதானநிலையம் முன்னெச்சரிக்கை செய்யத் தவறிவிட்டது என்று பலரும் குறைகூறினர். பார்லிமெண்டிலும் அங்கத்தவர் பலர் அவதானநிலையத்தைக் கண்டித்தனர். அதனால்தான் இப்பொழுது முன்னெச்சரிக்கையாகவே 'புயல்வருகிறது' என்று அவதானநிலையம்பயமுறுத்துகிறதுபோலும்! பொதுவாக கொழும்பு அவதானநிலையம் மழைபெய்யுமென்றால் அன்று வெய்யில் கடுமையாக இருக்கும். காற்று வீசுமென அது அறிவித்தால் மழையிருக்காது; காற்றுமிருக்கது. இப்பொழுது பரவாயில்லை! புயல் வீசுமென அது எச்சரித்துக் கொண்டிருப்பதால் 'ஓநாய் ஓநாய்' என்ற கதையாகிவிடவும்கூடுமல்லவா?

ஃ ஃ ஃ

1957-ம் ஆண்டில் இலங்கையில் பெருவெள்ளம் ஏற்பட்டதல்லவா? அதைப்போல் இம்முறையும் பெருவெள்ளம் ஏற்படுமென்றும் பயிர்களுக்குப் பெரும் சேதம் ஏற்படுமென்றும் இதை தவிர்க்கமுடியாதென்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு சோதிடர் காணி நீர்ப்பாபன அமைச்சருக்கு முன்னெச்சரிக்கை செய்திருக்கிறாராம். குளங்கள் பலவும் உடைப்பெடுக்குமென்றும் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்தில் மழை ஓயவில்லை. திருக்கார்த்திகைத் தீபத்தோடுதான் மழை ஓயும் என்பது பலரின் நம்பிக்கை.

யாழ்ப்பாண நகர வீதிகள் நரகமாகக் காட்சியளிக்கின்றன. வீதிகளில் ஏற்பட்ட குழிகளை 'பூசி மெழுகும்' வேலைகள் செய்து சமாளிப்பது இங்குள்ள வழக்கம். சிறுகற்களைப் போட்டு தார் பூசி 'மெழுகி'ச் சமாளித்த இடங்களெல்லாம் இப்பொழுது பழையபடி பள்ளங்களாகக் காட்சியளிக்கின்றன.

இந்தச் சிறுகற்கள் நடந்து செல்வோரின் பாதங்களைப் பதம் பார்க்கின்றன. பஸ் நிலையத்தைப் பற்றிச்சொல்லவேவேண்டியதில்லை. பஸ் நிலையத்தில் சில சமயத்தில் பின்பிடிக்கக்கூடிய சந்தர்ப்பம் வாய்க்கலாம்.

ஆரியகுளம், மற்றும் சிறு குளங்கள் எல்லாம் நிறைந்துள்ளன. பள்ளத்தாக்கான இடங்களில் உள்ளவர்கள் தங்கள் வீடுவாசல்களைவிட்டு வெளியேறிவிட்டனர்.

—ஊர்சுற்றி

## சங்கக்கடையில் திருட்டு

திருமலை, செவ்வாய்

மடத்தடி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கக்கடையில் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவு போனது குறித்து பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கு இடமாற்ற கடிதங்கள் அனுப்பப்பட்டன

சுழிபுரம், திங்கள்
அகில இலங்கை ரீதியில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் ஆசிரியர் இடமாற்றத்துக்கான அறிவித்தல்கள் இப்பகுதியிலுள்ள அநேக ஆசிரியர்களுக்கு தனித்தனி பதிவுதபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கடமையாற்றும் இரண்டு ஆசிரியர்கள், சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாசாலையில் கடமையாற்றும் இரண்டுஆசிரியர்கள், தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலையில் மூன்று ஆசிரியர்கள், பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் இரண்டு ஆசிரியர்கள், சித்தங்கேணி கணேஸ்வராபாடசாலையில் ஒரு ஆசிரியர் ஆகியோர்களுக்கு இதுவரை இடமாற்றக் கடிதங்கள் கிடைத்துள்ளன.

மேலும் சிலருக்கு கடிதம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இடமாற்றம் கிடைத்தவர்களிற் சிலர் ஆசிரியதராதரப்பத்திரம் உடையவர்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# பேட்டி காணச்சென்ற தூதுக்குழுவினர் ஏமாந்தனர்

வல்வெட்டித்துறை, திங்.
வடமராட்சி பஸ் பிரயாணிகள் சங்க தூது குழுவினர் வடமராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பஸ் சேவைகள் சில பாதைகளில் ஒழுங்கற்றதாக நடைபெற்று வருவதாகவும் பருத்தித்துறை—நெல்லியடி, பருத்தித்துறை--உடுப்பிட்டி ஊடாக யாழ்ப்பணம் செல்லும் ''எக்ஸ்பிரஸ்'' சேவை முக்கிய இடங்களில் தங்குவதில்லையென்றும் வேறும் பல பிரச்னைகள் குறித்து பருத்தித்துறை பஸ் டிப்போ மேலதிகாரியுடன் கடித மூலம் தொடர்பு வைத்தனர்.

இத்தொடர்பின் நிமித்தம் டிப்போ மேலதிகாரி பிரயாணிகள் சங்கத்திடம் பிரச்னைகளை நேரில் பரிசீலனை செய்வதற்கு ஒரு குறிப்பிட்டநாளை தெரிவு செய்து அனுப்புமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க தூதுக்குழுவினர் சென்ற மாதம் 28-ந் திகதியை தெரிவுசெய்து அனுப்பினர். அவற்றிற்கு டிப்போ மேலதிகாரி 28-ந் திகதி தனக்கு வசதியில்லையென்றும் 30-ந் திகதி பிற்பகல் இரண்ணரை மணிக்கு சந்திக்குமாறும் அறிவித்திருந்தார்.

குறிப்பிட்ட தினமான 30-ந்திகதியன்று தூதுக்குழுவினர் திரு. கே. அருளம்பலம் தலைமையில் அவ்விடம் சென்றபோது மேலதிகாரியையோ அன்றிடிப்போமனேச்சரையோ அவ்விடத்தில் காணவில்லை. தூதுக் குழுவினர் பல மணிநேரம் அவர்களை எதிர்பார்த்திருந்தும் அவர்களைக் காணுதபடியால் அவ்விடத்தில் நின்ற மற்ற உத்தியோகஸ்தர்களை விசாரித்த பொழுது தங்களுக்கு அவர்கள் எவ்விடம் சென்றுர்கள் என்பது தெரியாதென பதிலளித்தனர்.

தூதுகுழுவினர் அவ்விடத்தில் வைக்கப்பட்டிருந்த விசாரணைப் புத்தகத்தில் தாங்கள் அவ்விடம் வந்த நோக்கம்பற்றிய குறிப்பைப் பதிந்து வைத்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

## மீனவர்கள் வீடு திரும்பினர்

சுழிபுரம், திங்கள்
சுழிபுரத்தில் வெள்ளத்திஞல் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று மிகவும் துரிதமான சேவை செய்வதில் சுழிபுரம் கிராமசேவையாளர், சுழிபுரம் கிராம சபைத்தலைவர் திரு. சு.கந்தசுவாமி ஆகியோர் அதிக கவனம் செலுத்தினர். பொன்னாலை கடலில் மீன் பிடிக்கச் சென்ற கோஷ்டியினரைக் கடலில் இறங்கவிடாது வீட்டுக்குத் திருப்பிஅனுப்பினர். அப்பகுதி கிராம சேவையாளர் இவ்விஷயத்தில் அதிக கவனம் செலுத்தினுர்.

## உள்ளூராட்சிசபைகளின் தேர்தல் முடிவுகள்

பம்பலப்பிட்டி, திங்.
பாணந்துறை நகரசபைத் தேர்தலில் கூட்டாட்சிக் கட்சியினர் ஏழு ஸ்தானங்களையும், ஐ. தே. க. ஒரு ஸ்தானத்தையும் பெற்றன.

ஹட்டன்-டிக்கோயா நகர சபைத்தேர்தலில் சுயேச்சையாளர்கள் அதிகப்படியான ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

பதுளைமாநகரசபைத்தேர்தலில் ஐ. தே. க. அதிகப்படியான ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

வத்துகெதர நகரசபைத் தேர்தலில் மீண்டும் ல. ச. ச. கட்சியே அதிகப்படியான ஸ்தானங்களைப் பெற்றுள்ளது.

சிலாபம் நகரசபைத்தேர்தலில் பதினெரு ஸ்தானங்களில் ஏழு ஸ்தசனங்களை ஐ. தே. க. கைப்பற்றியுள்ளது.

மாத்தளையில் சுயேச்சையாளர்கள் அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

அப்பாந்தோட்டை நகர சபைத் தேர்தலிலும் சுயெச்சையாளர்களே அதிகப்படியான ஸ்தானங்களைக் கைப்பற்றினர்,

## "ஒத்துழைப்பே அவசியம்"

மாவிட்டபுரம், திங்கள்
''கிராமமுனனேற்றம் மக்களது ஒத்துழைப்பிலேதான் தங்கியுள்ளது. எமது சக்திகளை ஒருமுகப்படுத்திச் சீர்திருத்தம் செய்யவேண்டியது நமது கடமை. எனவே நாம் அனைவரும் ஒரியக்கமாகத் தொழில்பட வேண்டும்'' என்று மாரீசன்கூடல் சென். கயித்தான் கிராம முன்னேற்றச்சங்கக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய திரு. சூ. அ. இராசேந்திரம் கூறினுர்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. ச. பூபாலபிள்ளை, உபதலைவர்: திரு. சு. செ. இரத்தினம், செயலளர்: திரு. ஆ. சவிரிப்பிள்ளை, உதவிச் செயலாளர்: திரு. செ. அ. மரியதாஸ், பொருளாளர்: திரு. பி. மரியாம்பிள்ளை. நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## பஸ்கள் செல்லாது

சுழிபுரம், திங்கள்
சுழிபுரம் காளுவன் சந்திக் கருகாமையில் பிரதான தெரு தண்ணீர் பாய்வதற்காக வெட்டிவிடப்பட்டுள்ளதால் மூளாய்க்கும் காரை நகருக்கும் செல்லவேண்டிய பஸ்வண்டிகள்சுழிபுரம்வரையும் வந்து திரும்பி யாழ்ப்பாணஞ் செல்கின்றன. வெள்ளம்வடிந்து வெட்டப்பட்ட பாதையால் செல்லுறது. வெட்டப்பட்டபாதை மூடப்பட்டபின்னர்தான் பஸ்வண்டி ஓடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## உபதபாற்கந்தோர் தரம் உயர்வு

வவனியா, திங்கள்
வவனியா மாவட்டத்தில் உள்ள பல உபதபாற்கந்தோர்கள் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 'சி' கிறேட்டில் இருந்து 'பி' கிறேட்டாக உயர்த்தப்பட்டுள்ளன. அவையாவன:- கொக்குத்தொடுவாய், குமுளமுனை, மதவுவைத்தகுளம், பாலமோட்டை, கறுப்பட்டைமுறிப்பு, கனகராயன் குளம், ஆனந்தபுரம், நயினமடு, சின்னச்சிப்பிகுளம் ஆகியவையே. வவனியா எம். பி. திரு தா. சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இவைதரம் உயர்த்தப்பட்டுள்ளது.

## பாராட்டுவிழா

மீசாலை, திங்கள்
''கடந்தசிலகாலமாக இக் இக்கல்லூரியிலிருந்து மாணவருக்கும் பாடசாலை வளர்ச்சிக்கும் அதிக சேவையாற்றியதன்மூலம் நல்ல பெயர் எடுத்துவிட்டார்என்று சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அதிபராகஇருந்து இளைப்பாறிய திரு. கந்தையாவுக்கு அளிக்கப்பட்டபிரிவுபசாரத்தின்போது சாவகச்சேரி நகரசபை அங்கத்தவர்திரு. சு கனகரத்தினம் கூறினுர்.

இவ்வைபவத்திற்கு சாவகச்சேரி முன்னுள்உபஅதிபர் திரு. செ. கை. செல்லையா தலைமைவகித்தார்.

திரு. இ. த, சுப்பிரமணியம் பேசுகையில், ''இவர் தம்காலத்தில் பாடசாலையில் அனைவரையும் ஒற்றுமைப்படுத்திச் சமாதானத்தையும் நிலைநாட்டி சிறப்பாகநிர்வாகத்தை நடத்திஞர் என்று கூறிஞர்.

திரு. கந்தையாவின் சேவைகுறித்து வேறுபலரும் பேசினர்.

## கடல் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்
நயினுதீவில் சென்ற சில நாட்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நயினுதீவு வெள்ளக்கடாகக் காட்சி அளிக்கிறது. பள்ளக்காணிகளில் குடி இருந்த ஏராளமான சிறு குடிசைக்காரர்கள் வீடுகளை விட்டு வெளியாகிவிட்டார்கள். கடல் கொந்தளிப்பு கூடுதலாக இருப்பதால் கடற்கரையை அண்டியுள்ள வீட்டுக்காரர்கள் வீடுகளைவிட்டு வெளியாகவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. மழை தொடர்ந்து பெய்யுமாஞல் நயினுதீவுப் பொதுமக்கள் மிக்க கஷ்டமடைய நேரிடும். போக்குவரத்துக் கஷ்டத்தால் உணவுப் பொருட்களுக்கே பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயமாக நயினுதீவு தெற்கு கிராமமுன்னேற்றச் சங்கக் காரியதரிசி திரு. அ. நல்லையா தீவுப்பகுதிக் காரியாதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

## வேலணையில் களை பிடுங்கினர்

ஊர்காவற்றுறை, திங்கள்
வேலணை அரசினர் மத்திய கல்லூரி மாணவர்ாள் கல்லூரி ஆரிரியர்கள் தலைமையில் ஊர்வலமாகச் சென்று வயல்களில் களை பிடுங்கினர். சரவணைக் கிராம சேவையாளர் தலைமையில் நடைபெற்ற களை பிடுங்கு விழாவில் சுமார் 150 மாணவர்கள் கலந்துகொண்டு ஐந்து ஏக்கர் வரையில் களை பிடுங்கிய மாணவர்கள் காலை 8 மணிக்கு களை பிடுங்குதலை ஆரம்பித்து 11 மணிக்கு முடித்துக்கொண்டனர்.

# இடமாற்றப் பிரச்னைபற்றி தமிழாசிரிய சங்கம் அதிருப்தி

யாழ்ப்பாணம், செவ்.
''பாடசாலைகளை அரசாங்கம் கையேற்ற பின் இடமாற்றப் பிரச்னை கல்வி விஷயத்தில் தீராத தொல்லைகளை ஏற்படுத்திவருகின்றது. மேலும் கல்விக்கொள்கைகளைப் புறக்கணித்து ஆசிரியர் இடமாற்றங்கள் நடைபெறுவதால் தேசியக் கல்வி அபிவிருந்தி சீர்குலைவதுடன் ஆசிரியர் சமூகத்திலும் பெரும்ஏமாமற்றமேகாணப்படுகிறது. எனவே எந்த ஒரு ஆசிரியர்களையும் வலுக்கட்டாயமாக இடமாற்றம் செய்வது கல்வி அபிவிருத்திக்கும் ஆசிரியனுக்கும்இழைக்கப்படும் பெரும் முறைகேடும் அநீதியுமாகும்.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் நகுலேஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறிஞர்.

அவர் மேலும் கூறியதாவது,-

இப்பிரச்னைகளுக்கெல்லாம் சுமுகமாகத் தீர்வு காணும்பொருட்டு சமீபத்தில் பாராளுமன்ற மண்டபத்தில் பல தமிழாசிரியர் சங்கப்பிரதிநிதிகளைஉள்ளடக்கியதாக, வடபகுதிப்பாராளுமன்ற உறுப்பினர்களாற் கூட்டப்பட்ட கூட்டத்தில் ஆசிரியர் மாற்றப் பிரச்னை பற்றி எல்லோராலும் ஏற்றுக்கொண்ட ஒத்த முடிபுகளின் கொள்கைகளை சங்கங்களுக்கனுப்பி ஆலோசனை கேட்கப்படாமையு அம்முடிபுகளுக்குத் தக்கதாகத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படாமையும் வட இலங்கைத் தமிழாசிரியர்களிடையே ஆழ்ந்த கவலையளிக்கிறது. ஆனுலும் நாம் எமது நீதி நியாயமான கோரிக்கைகளை கல்விப்பகுதி கல்வி மந்திரி, பிரதமந்திரி உட்படபாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் முறையிடுவதோடு தொழிற்சங்க ரீதியாகவும்நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு முதற்படியாகமாற்றத்திற்குட்பட்ட ஆசிரியர்கள் தனித்தனி தமக்கு இழைக்கப்பட்டஅநீதியை நியாயபூர்வமான கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டி மாற்றத்தைத்தடை செய்யுமாறு கல்வி அதிபருக்கும் ஏனையோருக்கும் விசேஷமாகப்பாராளுமன்றஉறுப்பினர்களுக்கும் மனுக்களை அனுப்பிவைக்கவேண்டும்''

இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்குமேற்பட்ட ஆசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட வட-இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் இடமாற்றப்பிரச்னைபற்றி ஆராயப்பட்டு எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

# 'சுதந்திரமான தொழில்களில் தமிழர்கள் ஈடுபடவேண்டும்'

## நூல் வெளியீட்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்.
''சைவப் பிள்ளைகட்குச் சைவச் சூழ்நிலையிலேயே கல்வி கற்பிக்கவேண்டும். போட்டிகளும் பொருமைகளும் முரண்பாடுகளும் நிறைந்துள்ள இவ்வுலகிலே, கடவுளைப்பற்றிய சிந்தனைதான் நமக்குச் சாந்தியளிக்கக்கூடியது. சமய நூல்களை நன்கு கற்றுச் சமயவாழ்வு வாழும் வகையிலே மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்'' எனத் திரு. கே. பி. ஹரன், யாழ். திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெற்ற 'சுடரொளி' வெளியீட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி மாணவ மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி ஆசிரியர் திரு சி. சரவணபவன் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

விழாவிற்குத் தலைமைதாங்கிய ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது: தமிழ்க் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி நாம் நன்குசிந்தித்துச்செயலாற்ற வேண்டும். அரசாங்க உத்தியோகம் பெறுவதுதான் தமிழர்களின் இலட்சியமாக இனியும் இருத்தல்கூடாது. ஆனுல் எல்லோருக்குமே அரசாங்கஉத்தியோகம் கிடைக்கும் என எதிர்பார்க்கமுடியுமா? நாடு இன்றிருக்கும் நிலையில் விவசாயம், கைத்தொழில் போன்ற சுதந்திரமான தொழில்களில் நீங்கள் ஈடுபடல்வேண்டும். இத்தகைய தொழில்களில் ஈடுபட்டால். மொழிப்பிரச்னை என்பதே ஒருபோதும் ஏற்படமாட்டாது. விவசாய, கைத்தொழில் வளர்ச்சியே நமது நாட்டிற்குத் தேவை அவை பற்றிய அறிவைப்புகட்ட வேண்டியது ஆசிரியர்களின் கடமை.

யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. சண்முகதாஸ் 'தமிழிற் போர்ப்பாடல்கள்' என்ற பொருளிற் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திஞர் 'சுடரொளி' இணையாசிரியை செல்வி இ. புஷ்பவதி நன்றியுரை கூறிஞர்.

## சலவைத் தொழில் பாதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்.
கடந்த ஏழு நாட்களாக தொடர்ந்து பெய்த மழையினல், யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சலவைத்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சூரிய வெளிச்சமில்லாது வானம் மப்பும் மந்தாரமுமாகஇருப்பதனுல் துணிகளை உலர்த்த முடியாமலும், தொடர்ந்து பெய்யும் மழையில் துணிகளை சலவை செய்யமுடியாமலும், சலவைத்தொழிலாளர் கஷ்டப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பகுதியில் சில லோண்டரிகள் பூட்டப்பட்டிருப்பதால் பொதுமக்கள் குறித்த தவணைக்கு துணிகளை எடுக்கமுடியாது திண்டாடுகின்றனர். சில லோண்டரிகள் திறந்திருந்த போதிலும் வேலைகள் எதுவும் நடைபெறவில்லை.

## தபாற்கந்தோர் செல்லத்தடை

வல்வெட்டித்துறை. திங்.
அல்வாய்-காந்தியூடுக்கு ஊடாகச் செல்லும் பொன்னம்பலம் வீதி பெரும் வெள்ளம் காரணமாகப் போக்குவரத்துச் செய்யமுடியாமல் அப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இவ்வெள்ளம் வற்றப் பல நாட்கள் செல்லுமென்றும் இதனுல் அல்வாய் தபாற்கந்தோருக்குச் செல்பவர்களும் தோட்டங்களுக்குச் செல்வோரும் நான்கு மைல் கூடுதலாகப் பிரயாணம் செய்ய வேண்டிய நிர்க்கதிக்களாகியிருக்கிறுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெஞ்சத்தில் நிலைக்க

--மகான்--

ஜலவாயுக் குண்டுகளை உற்பத்திசெய்யும்படி ட்றூமன் உத்தரவிட்டார்-31-1-1950.

கொரியாயுத்தம் ஆரம்பமானது: 25-6-1950.

ஸ்டாலின் காலமானுர்: -5-3-1953.

ஜலவாயுக் குண்டை வெடித்ததாக ரஷ்யா அறிவித்தது: 20-8-1953.

5 மார்ச் 1953: மலன்கோவ் சோவியத் பிரதமராகப் பதவியேற்ருர்.

27 மார்ச் 1958: புல்கானின் ராஜினுமா. குருஷ்சேவ் சோவியத் பிரதமராஞர்.

6 ஜனவரி 1959: பிரெஞ்சு அதிபராக டிகோல் பதவியேற்ருர்.

2ஏப்ரல்1959: திபெத் தலாய்லாமா இந்தியாவுக்குத் தப்பியோடியது.

16 டிசம்பர் 1960: நியுயோர்க்நகருக்கு மேலாக விமானவிபத்து. 132பேர் மாண்டனர்.

3 ஜனவரி 1961: கியூபாவுடன் அமெரிக்கா ராஜீய உறவுகளை முறித்துக்கொண்டது.

1 மார்ச் 1961: அமெரிக்க இளைஞர் சமாதானப்படையை ஜனுதிபதி கென்னடி நிறுவினுர்.

12 ஏப்ரல் 1961: முதலாவது விண்வெளிவீரர் வானவெளிக்கு அனுப்பப்பட்டார் - யூரி ககாரின். (ரஷ்யா)

5 மே 1961: அமெரிக்காவின் முதலாவது விண்வெளிப் பிரயாணி (அலென் பி ஷெப்பர்ட்) வானவெளியில் வலம்வந்தார்.

13 ஆகஸ்ட் 1961: கிழக்கு மேற்கு பேர்லினுக்கிடையே சுவர் எழுப்பப்பட்டது.

29 அக்டோபர் 1961: சரித்திரத்தில் முதலிடம் பெறும் 50 மெகாடன் ஜலவாயுக் குண்டை ரஷ்யா பரீட்சித்தது.

31 மே 1962: 60 லட்சம் யூதர்களைக் கொன்ற குற்றத்துக்காக அடோல்வ் ஈச்மன் இஸ்ரேலில் தூக்கிலிடப்பட்டார்.

20 நவம்பர் 1962: இந்திய-சீன எல்லை யுத்தத்தில் சீனு யுத்த நிறுத்தத்தை அமுல்செய்தது.

## பூகம்பங்கள்

1 நவம்பர் 1755 (போர்த்துக்கல்): லிஸ்பனில் பூகம்பம். 20,000 பேர் மாண்டனர்.

18 ஏப்ரல்1906: ஸான்பிரான்சிஸ்கோவில் பூகம்பம். 500 பேர் மாண்டனர்.

28 டிசம்பர் 1908: சிஸிலியிலுள்ள மெஸ்ஸினுவில் பூகம்பம். மாண்டவர்கள் தொகை 85,000 பேர். ஒரு நகரம் நாசம்.

1 செப்டம்பர் 1908: ஜப்பானிலுள்ள யோகோஹாமில்பூகம்பம் 90,000 பேர் மாண்டனர்.

31 மே 1935: இந்தியாவிலுள்ள குயெட்டாவில் பூகம்பம். 50,000 பேர் மாண்டனர்.

24 ஜனவரி 1939: சிசிலியில் பூகம்பம். 30,000 பேர் கொல்லப்பட்டனர்.

27 டிசம்பர் 1939: வட துருக்கியில் பூமியதிர்ச்சி. 100,000 பேர் பலியானுர்கள்.

5ஆகஸ்ட்1949: ஈகோடோரில் பூகம்பம். 6,000 பேர் மாண்டனர்.

15 ஆகஸ்ட் 1950: இந்தியாவில் இரண்டாவது பெரிய பூகம்பம். (அஸாமில்) 30,000 பேர் மாண்டனர்.

9 செப்டம்பர் 1954: வட அல்ஜீரியாவில் பூகம்பம். 1,500 பேர் மாண்டனர்.

17 ஜூன் 1956: ஆப்கானிஸ்தானில் காபூலில் பூகம்பம். (பத்து நாள் வரை) 2,000 பேர் மாண்டனர்.

2 ஜூலை 1957: வட ஈரானில் பூமியதிர்ச்சி. 1,564 பேர் மாண்டனர்.

13-15 டிசம்பர் 1957: மேற்குஈரானில் பூகம்பம் 1,392 பேர் பலியானுர்கள்.

21-22, 27-29 மே 1960: சிலியில் பூகம்பம். 5,700 பேர் மாண்டனர்.

1 செப். 1962: மேற்கு ஈரானில் பூமியதிர்ச்சி. 10,000 பேர் மாண்டனர்.

# வரகவி பாரதி கண்டகனவு

- க. ஜீவகாருண்யம் -

கற்பனைக் கெட்டாத அற்புதக் கவிஞன் பாரதி. இயற்கைக்கூடாக இறைவனைக் காண்பவன் கவிஞன் என்பார்கள். அந்தத்தன்மை முற்றிலும் பாரதியாரிடத்தில் அமைந்துள்ளது என்பதை யாரும் மறைக்கவோ-மறுக்கவோ முடியாது. அன்று பாரத நாடு சுதந்திரம் அடைவதற்காக எத்தனை எத்தனை இன்பக்கனவுகளையெல்லாம் கண்டான் பாரதி. அவன் கனவுகள் நனவாகவில்லையா? முற்றிலும் நனவாகி விட்டன.

அன்று பாடினுன் பாரதி,

'வெள்ளிப் பனிமலை மீது
உலாவுவோம் - அடி
மேலைக் கடல் முழுதுங்
கப்பல் விடுவோம்'

என்று.

இன்று வெள்ளிப் பனிமலையில் மட்டுமா ஏறினுன் இன்றைய விஞ்ஞான மனிதன். அதற்கும் எத்தனை எத்தனையோ மைல்களுக் கப்பாலுள்ள சந்திரமண்டலத்தையும் கண்டுபிடித்து விட்டானே! அடுத்து, மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்' என்ருர். இன்று பாரத நாட்டு மக்கள் மேலைக்கடல் மட்டுமல்ல, நீர்மூழ்கிக் கப்பல் மூலம் கீழைக்கடலிலும் கப்பல் செலுத்துகின்றனர்.

'சந்திர மண்டலத்தியல் கண்டுகளிப்போம்' என்ருர் இவரது கனவை நனவாக்க யூரிகாரின் முதன் முதலாக சந்திர மண்டலத்திற்கு ரொக்கெட்டில் சென்று வெற்றியுடன் திரும்பினுர். இன்னும் சந்திர மண்டலத்தியல் பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. இதனை அறிந்து அன்ருே தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் பாரதியை, 'பாட்டிற்கொருபுலவன் பாரதியடா' என்று வாழ்த்தினுர். எனவே பாரதி கண்ட கனவு உண்மைக் கனவு; இன்று நாளை என்பவற்றைக் கற்பனையால் உணர்ந்தவர் பாரதியார்.

பாரதியாரை நாம் என்றும் வாழ்த்துவோம்!

# பல்சுவை விருந்து

நகைச்சுவைக்குப் பெயர் போனவர் தென்னுலி இராமன். அவரைப் போல் ஈழத்திலும் ஒரு நகைச்சுவையாளர் இருந்துள்ளார். அவரை அறியாதவர்கள் இலர். அவர்தான் கல்லடி வேலன். இவரிடம் பாடம் கேட்டுப் படிக்கும் பொருட்டு பல சிறுவர்கள் வருவார்கள், அவர்கள் பாடம் படித்ததற்கு கைமாருக அவரது வீட்டுக் கதவுகளில் வெண்கட்டியினுல் ''கல்லடி வேலன், கல்லடி வேலன்'' என்று எழுதிவிட்டுப் போவது வழக்கம். இந்த எழுத்துக்களை அழிப்பதில் கல்லடி வேலனுக்குப் பெருஞ் சிரமம் ஏற்பட்டது. ஒருநாள் இதனை அடியோடு நிறுத்த எண்ணியவராய் கல்லடி வேலன் என்று எழுதியிருப்பதை அழித்துவிட்டு ''கண்டால் பொல்லடி, கண்டால் பொல்லடி'' என்று எழுதினுர். அடுத்த நாள் பாடம் படிக்க வந்த சிறுவர்கள் இதனைக் கண்டு தப்பினேம், பிழைத்தோம் என்று ஒரே ஓட்டமாகச் சென்றுவிட்டார்களாம். நகைச்சுவையின் இருப்பிடமல்லவா கல்லடிவேலன்.

ஃ ஃ ஃ

சுவையான உபதேசம்: உருளைக்கிழங்கை இரண்டாக வெட்டினுல் அதைக் கொண்டு 'வார்னீஸ்" பூசப்பட்ட பொருட்களிலுள்ள அழுக்கு செம்பில் பிடித்த களிம்பு போன்றவைகளை அகற்றலாம். இரும்பால் செய்யப்பட்ட பொருட்களிலும் பிளேட், கத்தி, கரண்டி ஆகியவைகளிலும் பிடித்து கிடக்கும் கறையை பச்சை வெங்காயத்தைக் கொண்டு அப்புறப்படுத்தலாம்.

ஃ ஃ ஃ

ஒரு நகைக் கடைக்காரர் பின்வருமாறு விளம்பரம் செய்திருந்தார். ''மின்னுவதெல்லாம் பொன்னல்ல. இதற்கு எதிர்மாருன நகைகள் எங்களிடம் இருக்கின்றன'' அடுத்த நாள் அந்தக் கடையில் ஏகப்பட்டக் கூட்டம்.

ஃ ஃ ஃ

''இந்தப் பிள்ளையால் பெரிய தொல்லை. சிவபெருமானிடம் பிள்ளை வரம் கேட்டேன். அவர் தனது பூதகணங்களில் ஒன்றை அனுப்பியிருக்கிருர் போலும்'' எனக் கூறிக் கூறிக்கொள்வாள், துடுக்குத்தனம் நிறைந்த அந்தப் பிள்ளையின் தாயார். சிறுவயதிலேயே துடுக்குத்தனம் நிறைந்ததாகக் காணப்பட்ட அந்தம் பிள்ளை யார் தெரியுமா? பிற்காலத்தில் உலகம் போற்றும் தெய்வமாக விளங்கிய சுவாமி விவேகானந்தர்.

தொகுப்பு:

அ. கனகசூரியர், ஊரெழு மேற்கு.

## பிடிவாதம்

-இ. சிறிஸ்ரி -

''ஏனடா சோமு, சோறு போதுமாடா'' என்ருள் சோமுவின் தாயார்.

''ஓ, சோறுபோதுமம்மா'' என்ருன் சோமு.

''நீ, இவ்வளவு நாளும் நல்லாச் சாப்பிட்டுவந்தாய்! இப்பொழுது ஏன் கொஞ்சமாய் சாப்பிடுகிருய்''

''பசிக்கவில்லை அம்மா''

''நன்ருய் சாப்பிட்டால் தானடா நன்ருக வளரலாம்'

'அப்படியாம்மா நீ நன்ருகச் சாப்பிட்டு, மரமாட்டம வளரு பார்ப்போம்.'

'எப்படியடா முடியும்? நான் வளரவேண்டியதில்லை வளர்ந்துவிட்டேனே!'

'அப்படியானுல் சாப்பிடாமல் விடேன்!'

தொடர் நவீனம்

# வாஞ்சி மலை

— க. கனகலிங்கம் —

தாத்தா கதையைச் சொல்லிவிட்டு மிகுதி, நாளை வாருங்கள் என்று கூறிவிட்டார். சிறுவர்களும் ஏமாற்றத்துடன் போய்விட்டு அடுத்தநாள் வெண்மணற்பரப்பில் கூடியிருந்து கிழவரின் வரவை ஆவலுடன் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தனர். கிழவரும் வந்திடவே சிறுவர்களது மகிழ்ச்சி இருமடங்காகியது. கிழவரும் தொண்டையை ஒரு முறை கனைத்துக்கொண்டு தொடர்ந்தார்.

''நின்ற இடத்திலே அமர்ந்த என்னை; ஜில் ஜில் என்று வீசிய குளிர்ந்த காற்று நித்திராதேவியை அணைத்தது. வெண்மணற் பரப்பு படுத்துறங்கும் பஞ்சணையாக மாறியது. நான் நித்திரையாகிவிட்டேன். சில நிமிடங்களின் பின்னர் கண் விழித்தேன். என்ன ஆச்சரியம்! எனக்கு அருகில் ஓர் வயோதிபர் எலும்பும் தசையுமாக கூனிக்குறுகி நடுநடுங்கிய வண்ணம் எனது கரத்தைக் கைப்பற்றியவண்ணம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார். பயத்தினுல் பீடிக்கப்பட்ட நான் 'சடார்' என்று எழும்பினேன். ஆனுல் கிழவரோ பிடியைத் தளர்த்தவுமில்லை கண்விழிக்கவுமில்லை. மங்கிய ஒளியில் கிழவரின் முகத்தை கூர்ந்துநோக்கினேன். கண்கள் இரண்டும் கொவ்வைப் பழங்கள்போல் காட்சியளித்தன. எனது தைரியத்தை யெல்லாம் வரவழைத்து பலம்கொண்டமட்டும் இழுத்து ஒருவாறு கிழவரின் பிடியினின்றும் தப்பினேன். கிழவரும் விழித்துக்கொண்டார். விழித்த கிழவர் 'அடஅற்பனே நான் உனக்கு என்னதவறு செய்தேன்? ஏன் என் தூக்கத்தைக்கலைத்தாய் இது நீதியோ முறையோஎன்று பலம் கொண்டமட்டும் கத்தினுர். நான் பயத்தினுல் நடுநடுங்கினேன். ஆனுல் கிழவர் சற்றுபரிதாபத்துடன் என்னை நோக்கினுர். எனக்கும் சற்றுத்தைரியம் வந்தது.

''தாத்தா நீங்கள் எங்கே போகவேண்டும்'' என வினவினேன். தம்பி நான் வசிப்பது வாஞ்சிமாலைச்சேரி என்ருர் கிழவர். வாஞ்சிமலைச்சேரி என்றெதும் எனக்குப் பயமாக இருந்தது, கிழவர் தொடர்ந்தார்: பட்டியிலுள்ள கால் நடைகள் சிலவற்றைக்காணுது அவற்றைத்தேடத்தலைப்பட்டேன் அதற்குள் இருட்டிவிட்டது. விடிவதற்குள் சேரிபோய்ச் சேரவேண்டும். இல்லையாயின் எஜமானின் கோபத்துக்கு ஆளாகவேண்டும், தயவு செய்து தம்பி சிறிது தூரமாவது என்னுடன் துணையாக கூடவருவாயா? என்று பரிதாபமான குரலில் இரந்தார். அவர் சொல்லை நம்பி இருவருமாக மயங்கி நிலவொளியில் ஒருவர் பின் ஒருவராக தட்டுத்தடுமாறி நடந்து கொண்டிருந்தோம். சற்றுமுன் தூங்கியதால் அப்பொழுது என்ன நேரம் என்று என்னுல் புரிந்து கொள்ளமுடியவில்லை. தொடர்ந்து சென்றுகொண்டிருந்தோம். பாதையின் இருமருங்கிலுமுள்ள அடர்ந்த காடுகளிலிருந்து நரியின் ஊளையும் பயங்கர கோட்டானின் அலறலும், மிருகங்களின் சத்தங்களும், யானையின் பிளிறலும் செவிப்பறையில் வந்து மோதின. தேங்கிய தண்ணீரில் வசிக்கும் தவளைகள் 'லபக் லபக்' என்றும், காட்டணிகள் 'கிர் கிர்' என்றும் ஒலி பெருக்கிக்கொண்டிருந்தன. பீதி என்னை ஆட்கொண்டது. நடைதளர்ந்தேன். நான் எதிர்பார்த்ததற்கு விரோதமாக கிழவர் மிகவேகமாக சென்று கொண்டிருந்தார், கிழவரின் போக்கு எனக்கு மேலும் அச்சத்தை விளைவித்தது. நான்சற்று பின்வாங்கினேன் ஆனுல் கிழவரோ திரும்பி வந்து 'தம்பி நான் உம்மைக் கவனிக்கவில்லை நீர் தொடருகின்றீர் என எண்ணிச் சற்று வேகமாக சென்றுவிட்டேன் என்று கூறி என்கையைப்பிடித்து இழுத்தார். அவ்வேளையில் நான் செய்வதற்கொன்றுமில்லை யாதலால் கிழவரோடு செல்லத் தலைப்பட்டேன். கிழவர் சிறிது தூரம் ஆறுதலாகச் சென்ருர் பின்னர் மிகவும் வேகமாக நடக்க ஆரம்பித்தார். கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லும் கடா போல் அவரை நான் தொடர்ந்தேன்.

(தொடரும்)

# சேர் ஹென்றி போர்ட்

- சி. சண்முகலிங்கம் -

அமெரிக்காவில் உள்ள கிறீன்பீல்ட் என்னுமிடத்தில் ஓர் ஏழை விவசாயிக்குப் புதல்வனுக ஹென்றி போர்ட் பிறந்தார். இளமையில் கல்விகற்க வசதியில்லாமலிருந்தபடியால் தனது தந்தைக்கு உதவியாகத் தோட்டத்தில் உதவி செய்துவந்தார், ஹென்றி போர்ட். ஓய்வு வேளைகளில் பிழைபட்ட கடிகாரங்கள், இயந்திரங்கள் திருத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த ஹென்றி போர்ட் 1891-ம் ஆண்டில் விஞ்ஞான மேதையான 'எடிசன் கொம்பனி' யில் ஒரு சிறு உத்தியோகத்தில் சேர்ந்து முதலாவது என்ஜினியரானுர். அங்கு ஏழு வருடங்களாகத் தான் செய்த அரிய முயற்சியினுல் 1896ல் முதல் மோட்டார் வண்டியை அமைத்தார். பின் 1903 ம் ஆண்டில் சொந்தச்செலவில் ஒரு மோட்டார் கம்பெனியை ஸ்தாபித்தார். இவரால் ஸ்தாபிக்கப்பட்ட போர்ட் ஸ்தாபனமே இன்று அதிக மோட்டார் வண்டிகளை உலகம் முழுவதிலும் உற்பத்தி செய்யும் ஓர் பெரிய ஸ்தாபனமாக விளங்குகின்றது. இவரின் ஸ்தாபனத்தில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். சேர் ஹென்றி போர்ட் முதலாவது மகாயுத்தத்தில் தமது சொந்த செலவில் யுத்த தளபாடங்களைச் செய்து கொடுத்ததோடு மட்டுமின்றி உலக சமாதானத்துக்காக அரும் பணியாற்றியவர்.

# கோபமும்பொறுமையும்

- தென்மயிலைச் சண்முகன் -

''தன்னைத்தான் காக்கிற்
சினங்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும்
சினம்''

என்பது தெள்ளுதமிழ் வள்ளுவரின் திருவாக்காகும். எமைம் நாம் காக்க விரும்பின் சினத்தை அடக்க வேண்டும். இன்றேல் அஃதெம்மை அழித்துவிடும்.

உலகநாடுகளிடையே நிலவிவரும் யுத்தங்களும் இக்கொடிய கோபத்தின் விளைவே. நாடுகளெல்லாம் பொறுமையுடையனவாயிருப்பின் உலகிலே அமைதி மிளிரும்.

கோபம் எமது வாழ்நாளையும் குறைக்கின்றது. எமது சாந்தமுக எழிலை அழிக்கின்றது. இவ்வாருக இன்னும் பல கெடுதிகளைச் செய்கின்றது. எனவே நாமெல்லாம் சினம் காத்து கடலினும் பெரிதாகிய பொறுமையுடையபூரணமனிதஞக வாழ்ந்துய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மல்யுத்ததினம்

## பருத்தித்துறையில் ஏற்பாடுகள்

மாவிட்டபுரம், திங்கள் உதக மல்யுத்த தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினர் இம்மாதம் 25-ம், 26-ம் திகதிகளில் உடற்பயிற்சி, விளையாட்டு, மல்யுத்த நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

25-ம் திகதி காலை 25மைல் ஸ்ரான்டட் சைக்கிள் ஓட்டப் போட்டியினையும் 5 மைல் மரதன் ஓட்டத்தினையும் பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. இராஜேஸ்வரன் ஆரம்பித்துவைப்பார்.

26-ம் திகதி மாலை ஆணழகன் போட்டி, மல்யுத்தப் போட்டி, குண்டெறிதல் போட்டி, தலையணைச்சண்டை என்பவற்றுடன் இலங்கை ஆணழகன் திரு. எம். ஏ. தியாகராஜா குழுவினரின் உடற்காட்சிகளும்மானிப்பாய் கொடிகாமம் புரடக்ஸ்' குழுவினரின் 'பொல்லாலை அடிச்ச காதல்' என்னும் நாடகமும் இடம்பெறவிருக்கின்றன. ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தின் இரண்டாவது விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு பருத்தித்துறைப்பட்டினசபைத் தலைவர் திரு. ந. நடராஜா தலைமை வகிப்பார். வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஜே. வான்சான்டன் தம்பதிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

## விநாயகர் விரதம்

மாவிட்டபுரம், திங்கள் வியாழக்கிழமை முதல் இப்பகுதியில் உள்ள விநாயகர் ஆலயங்களில் விநாயகர் விரதம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. காங்கேசன்துறை கசாத்துறை ஆனந்தப்பிள்ளையார் கோவிலில் வியாழக்கிழமை முதல் 21 தினங்களுக்கு ஸ்ரீவரதபண்டிதரின் 'பிள்ளையார்கதை' படிக்கப்படும். 21-ம் நாள் விசேஷ நிகழ்ச்சிகளுடன் பூர்த்தியடையும்,

## கொள்ளையடித்ததாக வழக்கு

பருத்தித்துறை. திங்கள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் அருகே தீவைக்கப்பட்டு மாணவர்களால் அணைக்கப்பட்ட வாழைக்குலைகளுடன் இருந்ததாகக் கூறப்படும் லொறியைக் கொள்ளையடித்ததாகக் குற்றம்சாட்டி நெல்லியடியைச் சேர்ந்த வி. இராசலிங்கம் என்பவர் மீது பொலிசார் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

எரிகாயங்களுடன் புலோலி அரசினர் வைத்தியசாலையில் இருக்கும் அவர் 2000 ரூபா பிணையில் விடப்பட்டுள்ளார்.

## 'சிங்களம் மட்டும் எங்கே?'

குருநாகல், செவ்வாய் குருநாலை மாநகரசபை அங்கத்தவர் ஒருவர் மாநகரசபை சிங்களத்தில் தனது கூட்டங்களை நடாத்தாதிருப்பதுபற்றிக் கண்டனம் தெரிவித்தார். பல மாநகரசபை உறுப்பினர் பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள் என்றும் ஆனால் மாநகரசபைக்கு வந்ததும் சிங்களத்தை மறந்துவிடுகிறார்கள் என்றும் திரு. டபிள்யு. பஸ்தின் குறிப்பிட்டார். இதே நேரத்தில் இன்னொரு அங்கத்தவர் யாழ்ப்பாணம் மாநகரசபையில் தமிழிலேயே அலுவல்களும் கூட்டமும் நடைபெறுகின்றனஎன்றும் குறிப்பிட்டார்.




### கொழும்பு

செவ்வாய் 7 - 12 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 யுனஸ்கோ உரைச்சித்திரம், 7-00 வயலின், 7-30 மத்தாப்பு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்.


# புகையிலையும் காய்கறியும் பயிரிடும் கமக்காரரே !

# பொஸ்றின்

உபயோகித்து உங்கள் பயிர்ப்பீடைகள் அனைத்தும் உடனே ஒழிவதை உறுதி செய்யுங்கள்.

- ★ உடனே செயலாற்றுவது
- ★ சக்தி வாய்ந்தது
- ★ பயிரிற் செறிவது (பயிரிற் செறிந்து, அதைத் தாக்கும் எந்தக் கிருமியையும் கொன்றொழிக்கிறது.)
- ★ பனிப் பூச்சி, அழுக்கணவன், மயிர்க்குட்டி, சந்துக்குத்தி முதலானவற்றை அழிக்கவல்லது.
- ★ கோவா, கத்தரி, மற்றும் காய்கறிப் பயிர்களுக்கும் உகந்தது




ஷெல் ரசாயனப் பொருட்கள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை நகரசபை தேர்தல் முடிவுகள்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை நகரசபையின் இரண்டாவது தேர்தல் நேற்றைய தினம் நடைபெற்றபோது தற்போதைய தலைவர், உபதலைவர் ஆகியோருட்பட தற்போதைய அங்கத்தவர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தலில் போட்டியிட்ட தற்போதைய எட்டு அங்கத்தவர்களில் மூவர் தோல்வியடைந்தனர்.

தலைவர் திரு. ந. நடராசா 392 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றுர். அவருடன் போட்டியிட்ட ஒருவர் கட்டுப்பணம் இழந்தார்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் அமைதியாக வாக்களித்தனர்.

தேர்தலில் வெற்றியீட்டியோர் விபரம்:

1-ம் வட்டரம்: திரு. வே. நாகநாதன் (தற்போதைய உபதலைவர்)

2-ம் வட்டாரம்: திரு. வ. சந்திரசேகரம்.

3-ம் வட்டாரம்: திரு. ந. நடராசா. (தலைவர்)

4-ம் வட்டாரம்: திரு. ப. ஆறுமுகம். (தற்போதைய அங்கத்தவர்)

5-ம் வட்டாரம்: திரு. எம். எம். மரியாம்பிள்ளை (தற்போதைய அங்கத்தவர்)

6-ம் வட்டாரம்: திரு. சி சிவசுந்தரம்.

7-ம் வட்டாரம்: திரு. எம். சபாரத்தினம். (தற்போதைய அங்கத்தவர்)

8-ம் வட்டாரம்: திரு. சி. சங்கரலிங்கம்.

9-ம் வட்டாரம்: திரு. சி. வல்லிபுரம்.

எதுவித அசம்பாவிதங்களும்இனிறித்தேர்தல்நடைபெற்ற தென்ருலும் முடிவு தெரிவிக்கப்பட்டபின் 5-ம் வட்டாரத்தில் வெற்றி பெற்றவரின் ஆதரவாளர் ஒருவர் எதிர்க் கட்சியினரால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

அரசியல் கட்சி ரீதியில் போட்டிகள் நடைபெறவில்லை என்ருலும் தமிழ்க் காங்கிரஸ்ஆதரவாளர்களே அதிகம் வெற்றி பெற்றுள்ளனர் என அறியப்படுகிறது.

REGAL--JAFFNA
NOW SHOWING
Margaret Rutherford
IN M. G. M's
MURDER AHOY
(Agatha Christie's Novel)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றி வாகை சூடிய திரைக்காவியம்!

7-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்

## குறைந்த செலவு

பளை, திங்கள்

சகாயவேலைத்திட்டத்தின் கீழ் பளை கிராமாபிவிருத்தி அதிகாரி திரு. ஜே. எஸ். பிரடெரிக் தலைமையில் முகாவில் கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் முகாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சுமார் 34,500 ரூபா பெறுமதி வாய்ந்த ஒரு பாதை அமைக்கப்பட்டுள்ளது. ஆனல் இப்பாதையின் பெயரில் அரசாங்கத்திற்கு ரூபா 750 மாத்திரமே செலவாகியுள்ளது. எனவே இச்சகாய வேலைத் திட்டத்தின் பயனுக 33,750 ரூபா லாபம் கிடைத்துள்ளது.

## ஆசிரியர்களுக்கு பிரியாவிடை

இருகலை, திங்கள்

இருகலை அரசினர் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடந்த மூன்றரை வருடங்களாக உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. மு. க, சூரியனும், கடந்த சில ஆண்டுகள் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய ஆசிரியர் திரு. ஐ.கு. தியாகராசாவும் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலைக்குச் செல்வதை முன்னிட்டு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திரு. ஸி, கே, ஆர். தியாகராஜா தலைமையில் பிரியாவிடைக்கூட்டம்நடைபெற்றது.

## அபராதம்

மாவிட்டபுரம், திங்கள்

சுன்ஞகம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. கான், திரு. அத்துறுகோறளை ஆகியோருக்குக் கிடைத்த தகவலின் பேரில் அவர்கள் தலைமையிற் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று உடும்பராயில் வடிசாராயத்துக்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த ஒருவரைக் கைதுசெய்தது. உரும்பிராயைச் சேர்ந்த சின்னப்பு தம்பிப்பிள்ளை என்பவரே இவராகும்.

மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. ஜி. எவ். ஏச். அத்துறுபாஞ முன்னிலையில் சின்னப்புதம்பிப்பிள்ளைஆஜர்செய்யப்பட்டபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். மாஜிஸ்டிரேட் 425 ரூபா அபராதம் விதித்தார். சுன்ஞகம் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி வழக்கை நடத்திஞர்.

## பயிர்கள் சேதம்

பளை, திங்கள்

பளைப் பகுதியில் நீண்டகால வரட்சிக்குப் பின் கடந்த இரண்டு வாரகாலமாக தொடர்ந்து பெய்த மழை காரணகாகப் பச்சிலைப்பள்ளிப் பகுதி நெல்வயல்களில் உள்ள பயிருக்கு 4 அடிக்கு மேல் நீர் ஏறியுள்ளது. இதஞல் பெரும்பகுதி வயல் நிலங்கள் அழியும் நிலையில் உள்ளதால் இப்பகுதி ஏழை விவசாயிகள்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து இப்பகுதிப் பயிர்ச்செய்கைக் குழுவினர் பெருவெள்ளத்தைக் கடலுக்குக்கடத்தும் வாய்க்கால்களை நல்நிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மழை தொடர்ந்து பெய்யுமாயின் பெரும் பகுதி வயல்நிலங்கள் பாதிக்கப்படுமென அறியப்படுகிறது.

## 20-ந் திகதி பென்ஷன் கிடைக்கும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் மற்றும் கச்சேரியில் அரசாங்க பென்ஷன் பணம் பெறுவோருக்கும் இம்மாதம்பென்ஷன்பணம்20-ந் திகதி [illegible] கச்சேரியிலிருந்து கிடைத்துள்ளது.

## அர்ச். லூசியா திருவிழா

மன்னர், திங்கள்

மன்னர் பள்ளிமுனை அர்ச். லூசியா ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. நாளாந்தம் நடைபெறும் நோவினைகள் பள்ளிமுனைக் கட்டளைச் சுவாமியார் வண. பிதா ஏ. சேக்கா நிவேற்றி வருகிருர். 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வேஸ்பருடனும் 13-ந் திகதி திங்கட்கிழமை பாடற்பூசையுடனும் திருச்சுரூப சுற்றுப் பிரகாரத்துடனும் இத்திருவிழா முடிவுறுமென தெரிய வருகிறது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## பிரயாணிகள் கஷ்டம்

மன்னர், திங்கள்

மன்னர்ப் பகுதியில் கடந்த பல நாட்களாகத் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக மன்னர் பஸ் நிலையம் சேறும் சகதியுமாகி அலங்கோலநிலை அடைந்துள்ளது. இங்குள்ள சில கிடங்குகளில் சிறுவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

மன்னர் பஸ் நிலையத்தில் உள்ள பிரயாணிகள் தங்கும் இடம்இன்னமும் பாவனைக்கு விடாதபடியால் பிரயாணிகள் கடைகளில் ஒதுங்கியும் மழையில் நனைந்தும் கஷ்டம் அடைகின்றனர்.

வாடகைக்கு அல்லது விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ''சிங்கப்பூர் கபே'' இல. 406, 3 மாடியுள்ள கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: க. நாகமுத்து, கருங்காலி, காரைநகர். 1448

ஒரு பிரபலமான
டுப்பிளிகேட்டறின்
பிரபலமான மொடல்
சகாயமானவிலைக்கு உண்டு
REX-ROTARY
M2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினுல், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கைகளைச் சரியாகக் கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாறும் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதஞல்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாத்திரம் இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்யுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஐஸ்லண்ட் கட்டிடம், கொழும்பு—3.
தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் எயிட்ஸ்

## விசேட அறிவித்தல்

### 1-1-66க்கு இடமாற்றம்பெற்ற ஆசிரியர்கள் விபரம் சேகரித்தல்

1-1-66க்கு இடமாற்றம்பெற்ற ஆசிரியர்கள் தங்களுடைய பூரண விபரங்களை 11-12-65 சனிக்கிழமைக்குமுன் தத்தம்கிளைச்சங்கக்காரியதரிசியிடம் அறிவிக்கவும். அதற்குரிய விபரம் கோரும் பத்திரங்களை கிளைச் சங்கக்காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

த. இராசேந்திரம்
பொதுக்காரியதரிசி,
வடஇலங்கைத்தமிழாசிரியர்சங்கம்.

6-12-65.
1289

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு டிசம்பர் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org